427

# ...EOPATHIC
# ...ILY GUIDE

OFFICE OF T... ...AR OF BOOKS ...
...Y 1930

TAMIL

LL N37
97705

By Dr. M. PAUL

# ஹோமியோபதி
# குடும்ப வைத்திய சிகிச்சை

26 MAY 1950
MADRAS

பர்மா, மண்டலே,
**டாக்டர் M. பால், H. M. B.,**
*அவர்களால் எழுதப்பட்டது.*

## 2ம் பதிப்பு

**பிரசுர உரிமை பெற்றது.**

*பிரசுரம்:*
இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்,
கும்பகோணம் (தென் இந்தியா)
**1950** **விலை ரூ. 2**

FIRST EDITION
Mandalay ... 1937

SECOND EDITION 1950
(First Indian Edition)

LL N37

Copy Right
**By Indian Institute of Homoeopaths
Kumbakonam.**

977.05

Printed at
**The Homoeopathy Press, Kumbakonam.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAY 1950
MADRAS

# DEDICATION

This Book is reverently dedicated
to my
REVERED GURU

THE LATE
**Dr. G. FRANCIS,** C. M. S.

at whose feet, I first learnt the
rudiments of this great
**HOMOEOPATHIC MEDICAL SCIENCE.**

*The Author.*

# பிரசுரக் குறிப்பு

டாக்டர் பால் அவர்களின் புத்தகத்திற்கு நான் ஒரு குறிப்பு எழுத ஆரம்பிப்பது பொருத்தமில்லாத விஷயமே ஆகும். ஏனெனில், வயதிலும், ஹோமியோபதி அறிவிலும், அனுபவத்திலும், என்னைவிட டாக்டர் பால் மிகவும் மேம்பட்டவராவர். ஆயினும் இப் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பை வெளியிடவும், இப் புத்தகத்தின் பிரசுர உரிமையை அடையவும் பாக்கியம் பெற்ற ஸ்தாபனத்தின் தலைவன் என்ற முறையிலேயே இதை எழுத முன்வந்துள்ளேன்.

டாக்டர் பால் அவர்கள் நமது தென் இந்தியாவைச் சேர்ந்தவரே என்றாலும், சென்ற சுமார் 40 வருட காலங்களாக நம் அண்டை நாடாகிய பர்மாவில் குடியேறி அங்கு திறம் பட ஹோமியோபதியைக் கையாடி வந்திருக்கின்றார்கள். இப்புத்தகம் அவரால் எழுதப் பட்டது. குறைந்தது 20 வருட வைத்திய

அனுபவம் பெற்ற பிறகுதான் என்பது தெளிவு. ஆகவே இதிலுள்ள விஷயங்கள் "அனுபவ வாயிலாகக் கண்ட உண்மைகள்" என்பதில் சந்தேகமே இருக்க முடியாது. தவிர ஹோமியோபதி சம்பந்தமாகத் தமிழில் முதன் முதல் வெளியான புத்தகம் இது தான். ஆகவே இம்முறையில் டாக்டர் பால் அவர்களுக்குத் தமிழுலகம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறது.

பர்மாவில் சமீப காலங்களில் ஏற்பட்ட அரசியல் சம்பவங்கள், மாறுதல்கள் காரணமாக டாக்டர் பால் அவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனினும் இந்த வயதிலும் ஊக்கம் குன்றாது தாம் செய்து வந்த சேவையைத் தொடர்ந்தே செய்து வருகிறார்கள். அவர் மேலும் பல வருடங்கள் ஹோமியோபதிக்குத் தொண்டுசெய்ய ஆண்டவன் அவருக்குத் தேக வலிவையும், மன நிம்மதியையும் அளிக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்கிறேன்.

இந்த இரண்டாம் பதிப்பைச் சரிபார்த்து வெளியிட உதவிய இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட் உதவியாளர் ஸ்ரீமான் K. V. ஸ்வாமிக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டு ஹோமியோபதியர்களும், தாய்மார்களும், இப்புத்தகத்தை வாங்கி அதிலுள்ள விஷயங்களை உணர்ந்து பலன் அடைவதுடன், இம்மாதிரி அனேக புத்தகங்களை வெளியிட ஊக்கம் அளிப்பார்கள் என நம்புகிறேன்.

''ஜெய் ஹிந்த்''

கும்பகோணம்
(தென் இந்தியா)
22—12—49

V. R. மூர்த்தி
டைரெக்டர்
இந்தியன் ஹோமியோபதி
இன்ஸ்டிடியூட்

# INTRODUCTION

## THE PROVINCIAL HOMOEOPATHIC MEDICAL COLLEGE, RANGOON.

*(Affiliated to the Independent School of applied Medical Sciences, Allahabad.)*

College Premises:
No. 224, Lewis Street,
RANGOON

Office:
No. 178, 47th Street,
EAST RANGOON.

(Dated the 5th August 1937)

It gives me great pleasure and pride in introducing to the Tamil Public, Dr. Paul's "TAMIL HOMOEOPTHIC FAMILY GUIDE" published for the first time in the East. Dr. Paul has now filled up a long felt gap in the Homoeopathic history of South India. I have gone through the book very carefully and am of opinion that the book has come as a great boon to the thousands of suffering Tamilians and thereby shall be an indispensable treasure in every Tamil Home. As the book is written in easy Tamil and sold very cheap, I earnestly hope that every Tamilian in duty bound will support the author's noble cause by purchasing a copy each.

**T. G. DHARAM,**
F. B. B. A., M. B. H. S. (Lond.),
Principal & late Prof. of Materia Medica and Organon,
**The Rangoon Homoeopathic Medical College**
**Rangoon, Burma.**



டாக்டர் M. பால், H. M. B.

## முதற்பதிப்பின் முகவுரை.

---

இச்சிறு நூல் நமது தமிழ் நாட்டுப் பெண்கள், வீட்டில் சுலபமாக படித்தறிந்து சாதாரண வியாதிகளை ஆரம்பத்திலேயே கண்டித்துக்குணமாக்கவும், டாக்டர்கள், ஆஸ்பத்திரி, அல்லது மருந்துசாலைகளில்லாத விடங்களில் ஒருபயமுமின்றி தைரியமாக வசிக்கவும், மேற்படி நூதன வைத்திய முறையைத் தமிழ்நாடுகளில் பரப்பி, அபிவிருத்தியாக்கவும் மிக எளியவர்களும்கையாடும்படியாக எளிய நடையில் யாவரும் அறிந்து கொள்ளும் படியான சாதாரணத் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. அடிக்கடி வியாதி காணும் பெருங்குடும்பங்களுக்கு இந்தமுறை பெரும் புண்ணியமாகத் தோன்றும். தமிழில் இந் நூல் இதுவே முதல் தடவையாக அச்சிடப்பட்டு வெளிவந்தபடியால் நமது குலாபிமானிகள் யாவரும் இதனை வாங்கி ஆதரிக்க

எதிர்நோக்குகிறோம். இப்பிரதியை அச்சிடுமுன் சில சொற்பிழைகளைத் திருத்தி, சில ஆலோசனைகளையும் கொடுத்த பண்டிதர் கண்ணையா, ஆர்யோபதேசகர் அவர்கட்கும் டாக்டர் ஜீ. ஜான் M.D. (Bio.), அவர்களுக்கும், இதனை பதிப்பித்து வெளியிட அதிக சிரமம் எடுத்த காரனேஷன் பிரஸ் பாக சொந்தக்காரர் கனம் அப்துல் கண்ணி சாயப் அவர்கட்கும் மாஞ்சான் பாரெஸ்ட் ஆபீஸ், ரிடயர்ட் எட் கிளர்க், ஸ்ரீமான் B. மதுரை பிள்ளை அவர்கட்கும் எமது நன்றியுள்ள வந்தனம் உரியதாகுக.

நூலாசிரியர்.

# அணிந்துரை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

கோடீஸ்வரராகிலும், யெளவனராகிலும், வியாதியாளர் அவைகளால் நுகரக்கூடிய இன்பங்களை அநுபவிக்கப் பெறார். செல்வமாதி இகசுகங்களனைத்தும் வீரர்கள்பாலே குடியிருக்கும். வீரமோ ஆரோக்யவானின் பொக்கிஷம்.

"வினுப் யர்தை: வீர: ஸ்ப்ருசதி
பஹுசுமான் ஹேனதி பதம்"

(செல்வமில்லாமலே வீரர்கள் உலகசுகங்களனைத்தையும் பெறுவர்.)

உண்ணும் உணவுகளாலும், அணியும் ஆடைகளாலும், வசிக்கும் இடங்களாலும் மனிதர்கள் சதா ஏதாயினுமொரு வியாதியால் பிடிக்கப்படுகின்றனர். அடிபடுவதும், நெருப்பிற் சிக்கிக் காயப்படுவதும், எதிர்பாரா வண்ணம் நேரிடும் இடுக்கண்கள். ஆகையால் மனிதர்களில், அதுவும் இல்லறவாசிகளில் யாரும் சதாகாலமும் வியாதியற்றவர்களாய் வாழ்வது அரிதினுமரிது.

வியாதிகள், அவசியம் வந்தே தீருமென்றால், அதை நீக்கிக்கொள்ள வைத்தியரைதேடுவதும் அவசியமாகிறது.

வைத்தியரோ மருந்துகளுக்குண்டான சிலவுகளுக்குமேல் தன்சிலவையும் சேர்த்து வசூல் செய்கிறார். ஆகையால் ஏழை மக்கள் வைத்தியர்களின் பூரண உதவியைப்பெற அசக்தர்களாகிறார்கள்.

இப்பெருங்குறையை நீக்க இப்போது இச்சிறு நூல் வெளிவந்து விட்டது. இதுவரை கற்றறிந்த வைத்தியர் களே கையாண்டு, ரகசியமாய்க் காப்பாற்றி வைத்திருந்த எளிய குடும்ப வைத்தியச் சிகிச்சா முறைகளை இச்சிறு நூல் எளிய நடையில் அனைவருக்கும் வெளிப்படுத்து கிறது. இந்நூலின் கடைப்பாகத்தில் காணப்படும் குடும்ப வைத்தியச் சிகிச்சை என்றவைகளை மனப்பாடம் செய்து வைத்துக்கொள்ளும் ஆண்பெண் குடும்பத்தினர்களின் வீட்டில் வைத்தியர் வரவேண்டிய அவசியமே இல்லை. குறைந்த சிலவில், எளிய முறையில் அனைவரும் தங்கள் குடும்பத்தினர்களுக் குண்டாகும் சகல வியாதிகளையும் போக்கிக்கொள்ள இந்நூல் பெரிதும் உதவி செய்கிறது. இதுவரை நம் அருந்தமிழ் பாஷையில் இது போன்ற ஓர் நூல் வெளிவந்ததில்லையென்று நாம் நிச்சயமாய்க் கூறு வோம்.

தமிழ் நாட்டுமக்களின் நன்மையைக் கோரி, தான் கையாண்டுவந்த முறைகளனைத்தையும் எளிய நடையில் வெளியிட்டுதவிய ஸ்ரீமான். **எம். பால்**, எச். எம். பி.

அவர்களுக்குத் தமிழ் மக்களனைவரும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

அவரின் முயற்சியைப் பயனுடையதாயாக்க எல்லாத் தமிழ் மக்களும் இந்நூலை வாங்கித் தங்கள் குடும்பப்பெண் மணிகளுக்குக் கற்பித்து, தமிழ் நாட்டுத்தாய்மார்கள் ஒவ்வொருவரையும் ஓர் குடும்ப வைத்தினியாகச் செய்ய வேண்டுமென்று நாம் எல்லாத் தமிழ் மக்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

எல்லாம் வல்ல இறைவன் நூலாசிரியருக்கு எல்லா வித நலன்களையும் அளித்துக் காப்பாற்றி, மேலும் இஃதே போன்ற பன்னூற்களை யியற்றித் தமிழ் மக்களுக்குதவும் ஊக்கத்தையளித்து ஆசிர் புரிவாராக!

(ஒப்பம்) பண்டித கண்ணையா,

[1—6—1937] ஆர்யோபதேசகர்

# REVIEWS

## Indian Homoeopathy Journal

Vol. III. April 1938 No. 10, Page 314

We are glad to receive a copy of the above book published in Tamil. Homoeopafhy, although now quite familiar in most parts of India, is comparitably a recent introduction into Tamil Nadu Province. So this small but useful book will be welcome by Tamil people in as much as it serves the purpose of home treatment in minor ailments which will no doubt save a poor man's money to a certain extent. We congratulate the author for his noble attempt and wish the book a good circulation.

# DHANAVANIKAN

Vol. V No. 44. MARGALI 30. 13—1—38.

RANGOON.

இப்புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் ஹோமியோபதி என்றால் என்ன வென்பதை வெகு விளக்கமாக எழுதப் பெற்றுளது. இரண்டாவது அத்தியாயத்தில், சிகிச்சை முறை, மருந்து வகைகள் அளவு முதலியவைகள் விளக்கப் பெற்றுள்ளன. மூன்றாவது அத்தியாயத்தில் மருந்தின் சக்தியும் நான்காவது அத்தியாயத்தில் சில முக்கியமான ஔஷதங்களும் அவைகளின் குணா குணங்களும் கூறபெற்றுள்ளன. இதில் சுமார் 90 வகை மருந்துகள் கூறப்பெற்றுள்ளன. கல்வியுள்ள சில தமிழ் குடும்பங்களுக்கு இம்முறை உபயோகப் பெறலாம் என்று நாம் நம்புகின்றோம்.

# பொருளடக்கம்


1. அத்தியாயம் 1
   ஹோமியோபதி என்றால் என்ன. 1

2. அத்தியாயம் 2
   சிகிச்சை முறை. 7

3. அத்தியாயம் 3
   சில முக்கியமான ஔஷதங்களும், அவைகளின் குணங்களும். 15

4. அத்தியாயம் 4
   தினசரி உபயோகமாகும் சில வெளிப்பூச்சுத் தாய்திராவகங்கள். 87

5. அத்தியாயம் 5
   குடும்ப வைத்திய சிகிச்சை. 93
   பத்தியம். 128

# ஹோமியோபதி குடும்ப வைத்திய சிகிச்சை

## அத்தியாயம் 1

## ஹோமியோபதி என்றால் என்ன ?

ஹோமியோபதி என்பது ஒருவித ஜெர்மன் வைத்திய சாஸ்திரம். இது இந்தியாவில் சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே நமது ஆரியர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆயுர்வேத வைத்திய சாஸ்திரம் இதைச் சேர்ந்ததே. ஒரு பிரசித்தி பெற்ற ஜெர்மன் டாக்டரான சாமுவேல் ஹானிமேன் என்பவர் இதைத் தீர ஆராய்ந்து, இந்த நவீன வைத்திய முறையை 1807-ம் ஆண்டு 'ஆர்கனுன்'

என்னும் வைத்ய நூலின் மூலமாக ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார். இவ்வாறு செய்ததினால் அவருக்கு நேரிட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆஸ்பத்திரிகளிலும், மற்றப் பொதுவைத்திய சாலைகளிலும் தற்போது கையாண்டு வரும் 'அல்லோபதி' என்னும் வைத்திய முறையை உபயோகித்து வந்த வைத்தியர்களெல்லோரும் ஒன்று கூடி இவரை எதிர்த்தனர். அதன் பயனாக அவர் ஜெர்மன் தேசத்தினின்றும் துரத்தப்பட்டுக் கடைசியில் பாரிஸ் நகரம் சென்று லக்ஷக்கணக்கான வியாதியஸ்தர்களைக் குணமாக்கி, புகழ் பெற்று, தமது 89-ம் வயதில் (1843-ம் வருஷம்) காலஞ்சென்றார்.

ஹோமியோபதி ஒளஷதங்கள் வியாதியின் குணத்திற்கு அக்குணத்தையே காட்டி அதைப்பூரணமாக சொஸ்தப்படுத்தி விடும்.

விரிவாகக் கூறுமிடத்து எந்த ஔஷதம் வியாதியற்ற ஒருவரால் அதிகமாக உட் கொள்ளப்பட்டால் எவ்விதமான குறிகளை உண்டாக்குமோ, அதேபோலுள்ள குறி களுள்ள ஒரு வியாதியை சிறிய அளவில் கொடுக்கப்பட்டால் சுகமாக்கும் என்பதே. இவ்வௌஷதங்கள் திரவ ரூபமாகவும் (Tinctures) பெரிய உருண்டைகளாக வும் (Pilules) சிறிய உருண்டை களாகவும் (Globules) மாவாகவும் (Triturations) தயார்செய்யப் படுகின்றன. இவை வாய்க்கு இனிப்பாகவும், சிற்சில சமயங்களில் ருசியே இல்லாமலும் இருக் கும். ஆனால் மற்ற சில மருந்துகளைப் போல் உபயோகத்திற்குப்பின் சரீரத்திற்கு ஒரு தீங்கும் செய்வதில்லை. குழந்தைகள், பெரியவர்கள், கிழவர்கள், கர்ப்ப ஸ்திரீகள் யாவரும் எவ்வித பயமின்றி சந்தோஷ

மாகச் சாப்பிடப் பிரியப்படுவார்கள். இவ்வௌஷதங்களை வியாதிகளின் ஆரம்பத்திலேயே குறிகளைக்கவனித்து உட்கொள்ளச்செய்தால் நிரந்தர பலன் ஏற்படும். இந்தநவீன மருந்துகள் ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரிலியா, இத்தாலி, அமெரிக்கா முதலிய பெரிய தேசங்களில் மிகவும் பிரபலமடைந்து வருகின்றன. காலஞ்சென்ற ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்களுக்கு ஒரு சமயம் ஒரு ஆபத்தான வியாதி ஏற்பட்டு எந்த வைத்தியனுலும் குணப்படுத்தக் கூடாமல் கடைசியில் ஹோமியோபதி ஔஷதத்தினுல்தான் நிவர்த்திக்கப் பட்டது. இப்பொழுது மகிமை மிக்க விண்ட்சர் மகா பிரபுவும், அமெரிக்க ஜனதிபதியும் ஹோமியோபதி சிகிச்சையில் தேர்ச்சி

பெற்ற வைத்தியர்களைத் தங்கள் சொந்த வைத்தியர்களாக நியமித்துக்கொண்டனர். 1931-ம் வருஷம் ரோமாபுரியில் கூடிய ஹோமியோபதி மகா சங்கத்தினர் யாவரையும் ரோமன் கத்தோலிக் சபையின் தலைவரான பரிசுத்த போப்பாண்டவரும் வாழ்த்தி ஆசி கூறினார். இவ்வைத்திய முறை வங்காளத்தில் எத்திசைகளிலும் பரவிவிட்டது. அங்குள்ள கல்வி கற்றறிந்த ஒவ்வொரு வங்காள ஸ்திரீக்கும் இது தெரியும். இவ்வௌஷதங்களின் விலை மிகக்குறைவாகயிருப்பதனாலும், வியாதியை சீக்கிரத்தில் நிவர்த்திப்பதினாலும் நம் நாட்டு ஏழை மக்களுக்கு இது தகுந்த வைத்திய முறை என்றே சொல்லலாம். கடந்த பத்து வருட காலத்தில் சென்னை

மாகாணத்தில் மூலை முடுக்குகளிலெல்லாம் இவ்வைத்திய முறை மிக விரைவாகப்பரவி வருவதே இதன் சிறப்பை விளக்கப் போதுமானது.



## அத்தியாயம் 2

## சிகிச்சை முறை

ஹோமியோபதி வைத்திய முறையில் வியாதியின் பெயர் தெரியவேண்டியது அனேகமாக அவசியம். வியாதியின் குணத்தை (குறிகளை) முதலில் கவனிக்கவும். அஜீரணமோ, வயிற்று வலியோ, தலை மயக்கமோ, வயிற்றுப்போக்கோ எதுவாக இருப்பினும் இவைகளின் குறிகளை நன்றாகக் கவனித்து பின் அக்குணங்களுடைய மருந்தை வியாதியஸ்தருக்குக்கொடுத்தால் வியாதி உடனே சொஸ்தமாகிவிடும்.

ஹோமியோபதி வைத்திய முறையில் பல ஔஷதங்களை ஒன்றாய்க் கலந்து கொடுப்பது வழக்கமில்லை. ஒரு வியாதிக்கு ஒரே ஔஷதம் தான். தேர்ந்தெடுக்கப்பட்டு

கொடுக்கப்படவேண்டும். சிற்சில சமயங்களில் இரண்டு மருந்துகள் கொடுக்க வேண்டியது அவசியமாயின், முதல் மருந்து கொடுத்து பதினைந்து நிமிஷங்களுக்குப்பின் இரண்டாவது மருந்தைக் கொடுக்கலாம்.

## மருந்து வகைகள்

முன் கூறியபடி, ஹோமியோபதி ஔஷதங்கள் ஒவ்வொன்றும் நான்கு விதமாகச் செய்யப்பட்டுள்ளன. இவைகளில் மாத்திரைகளே வீட்டு உபயோகத்திற்கு மிகச் சிறந்தவை. இவைகளைப் பத்திரமாக எந்த வாசனையும், நாற்றமும் படாமலும் வெய்யில், ஈரம், தூசி படாமலும் நன்றாக அடைத்து ஒரு பெட்டியில் வைக்கவேண்டும். இந்தப் பெட்டியில் வேறெதுவும் வைத்தல் கூடாது. மருந்தை எடுத்தவுடனே பாட்டிலை நன்கு மூடிவிடவேண்டும்.

ஒரு பாட்டிலின் மூடியை (Cork) மற்றொரு பாட்டிலுக்கு உபயோகிக்கக்கூடாது.

## ஔஷதம் கொடுக்கும் அளவு

பெரியவர்களுக்கு திராவகத்தில் வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு சொட்டுகளும், பெரிய உருண்டை மாத்திரைகளாக இருந்தால் இரண்டு அல்லது மூன்றும், சிறிய உருண்டைகளானால் நான்கு மாத்திரை முதல் எட்டு வரையிலும், மாவாக இருக்கும் ஔஷதங்களை ஒரு குன்றுமணியிடையும் (one grain) கொடுக்லாம். சிறுவர்களுக்கு இதில் அரைப் பங்கும், சிசுக்களானால் மூன்றில் ஒரு பாகமும் போதுமானது. மாத்திரைகளை நாக்கிலேயே சப்பித் தின்னவேண்டும். ஔஷதம் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு தடவை வியாதியின் தன்மைக்குத் தகுந்த

வாறு கொடுக்கலாம். வியாதி உக்கிரமாக இருந்தாலோ அல்லது அவசர உபாதி களிலோ அரைமணி அல்லது கால்மணி நேரத்திற்கு ஒரு தடவையும் கொடுக்கலாம். வியாதி சற்று குணமாகக் காணப்பட்டால் மருந்து கொடுக்கும் வேளைகளைக் குறைத்துக்கொண்டே வரவேண்டும். ஒளஷதங்களை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் அதி சீக்கிரத்தில் குணத்தைக் காட்டுவதால், ஆகாரம் சாப்பிட அரைமணி நேரத்திற்கு முன்போ அல்லது சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குப் பின்போ சாப்பிடலாம். இம் மருந்தை வெந்நீரில் கலந்து கொடுத்தால் அதிக சக்தியுண்டு. மருந்து உபயோகிக்கும்போது எதுவும் சுத்தமாயிருக்கவேண்டும்.

## ஔஷதங்களின் வீர்யம்

ஹோமியோபதி ஔஷதங்களைப்பற்றி படிக்கும்பொழுது அதன் வீர்ய சக்திகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம். மருந்துகள் உடலுக்குள் சென்று வியாதிகளை நன்றாகக் கண்டிக்கும்படியாக அவைகளுக்கு சக்தி கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை "வீர்யம்" என்றும் சொல்வதுண்டு. அவை முறையே தசாம்சம், சதாம்சம் என இருவகையாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

**தசாம்ச வீர்யம்:** தாவர வஸ்துக்களிலிருந்து பிழிந்தெடுத்த கலப்பில்லாத மருந்தின் ஒரு சொட்டு எடுத்து ஒரு சிறு பாட்டிலுக்குள் விட்டு அத்துடன் ஒன்பது சொட்டு திராவகமாவது (Rectified Spirit) சுத்த மழைத் தண்ணீராவது சேர்த்து

குறுக்கி வைக்கவேண்டும். அதற்கு 1x அதாவது வீர்யம் ஒன்று எனப் பெயர். வீர்யம் ஒன்றிலிருந்து ஒரு துளி எடுத்து, அத்துடன் 9-துளி திராவகமாவது சுத்த மழைத் தண்ணீராவது சேர்த்து கலக்கினல் அம்மருந்துக்கு 2x (வீர்யம் இரண்டு) என்று பெயர். இம்மாதிரியே ஒவ்வொரு வீர்யமும் தயாரிக்க அதனுடைய முன் வீர்யம் தயாரித்த பின்பே தயாரிக்க வேண்டும். இந்த முறைக்கு தசாம்ச வீர்யம் என்று பெயர். இவ்வாறு தயாரிப்பதனுல் ஔஷதங்களின் அளவு குறையுமே அல்லாது அவைகளின் சக்தி அதிகரிக்கச் செய்கிறது. வீர்யம் 200 போன்ற ஔஷதங்களை வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறைகளே கொடுக்கவேண்டும். இவ்வௌஷதங்களில் அதிக அனுபவமுள்ளவர்கள் தான்

அதற்கு மேல் உள்ள வீர்யங்களில் கொடுக்கலாம்.

உலோகத்திலிருந்து எடுக்கப்படும் ஔஷதங்கள் தூளாகயிருப்பதால் அவைகளை பசும் பாலிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை ( Sugar of Milk ) யோடு மேற் சொல்லிய படியே கலந்து அறைத்துச் செய்யப்படும். மருந்து கொடுக்கும்போது ஒரு குன்று மணியிடை எடுத்துக்கொள்ளப்படும்.

**சதாம்ச வீர்யம்:** இதுவும் தசாம்ச வீர்யம் தயாரிப்பது போலவே தயார் செய்யப் படும். ஆனால், 9 துளி திராவகம் அல்லது ஜலம் அல்லது மது சாரத்திற்குப் பதிலாக 99 துளிகள் சேர்க்கப்படவேண்டும். இவை சதாம்ச வீர்யம் ஒன்று எனக் கூறப்படும். அல்லது 1 அல்லது 1c என்று குறிக்கப் படும். வீர்யத்திற்கு தக்கவாறு 1, 2, 3,

4, 5, 6 அல்லது 1c, 2c, 3c, 4c, 5c, 6c என குறிக்கப்படல் வேண்டும். இவை 1000 லக்ஷமாக மேலே போகும். ஆனால், வீட்டில் உபயோகப்படுத்த தசாம்சம் 6x 6, 30x, 30 ம் போதும். 6x வீர்யம் சிறுவர்களுக்கு ஏற்றதாகும். அது குணமாக்காமற்போனல் 30x வீர்யம் பிரயோகிக்க வேண்டியது.

தசாம்சம் உதாரணம்: 1x, 3x, 6x. 12x, 30x, 200x.

சதாம்சம் உதாரணம்: 1, 1c, 2, 2c, 3, 3c, 6, 6c, 12, 30, 200, 1000. (அதிக வீர்யமுள்ள சதாம்சமான ஔஷதங்களை ஹோமியோபதி சிகிச்சையில் நன்ருக தேர்ச்சியடைந்தவர்கள் மாத்திரம் உபயோகிக்கக்கூடும்.)

## அத்தியாயம் 3

# சில முக்கியமான ஒளஷதங்களும், அவைகளின் குணங்களும்.

1. அகோனைட் (Aconite): சுரம், ஜலதோஷங்களின் ஆரம்பத்தில் உபயோகிக்கலாம். வாந்திபேதி, இருதய நோய், சீதபேதி, கக்குவாய், இரைப்பு, தலைவலி, தொண்டை உபாதைகள், உடம்பு வரண்டு கொதித்தல், அதிக தாகம், கவலை, தூக்கமின்மை, தாம் இறந்துவிடுவோமென்ற பீதி, பயம், குளிர்ந்து நடுக்கலெடுத்து வந்த காய்ச்சலுக்குப் பின் வரும் கொதிக்கும் காங்கை, வேகமான நாடி, குளிர்ச்சியான அல்லது உஷ்ணமான காற்றில் இருப்பதினால் வரும் வியாதிகள். இவ்வித வியாதிகள் திடீரென்று கண்டு சீக்கிரத்தில் அதிக பாரும். காய்ச்சல், அத்துடன் சளி

யில்லாத இருமல், தலையில் ஜளிப்பு. வியர்வை அதிகமாகும்போது மருந்தை நிறுத்துவிடவும்.

2. அஸ்குலஸ் ஹிப் (Aesculus Hip): நீடித்த தொண்டை இரணம். காய்ந்தும், எரிச்சலுடனும் இருத்தல். விழுங்குவதற்கு சிரமம். அடி முதுகிலும் அல்லது ஆசன எலும்புகளிலும், சப்பை எலும்புகளிலும் வலி. தூக்கத்தில் பயந்து எழும் குழந்தைகளுக்கு முக்கிய மருந்து. அடிக்கடி வெளிக்கு வருவதுபோன்ற உணர்ச்சி. ஆசன வாயில் குச்சிகள் இருப்பது போன்ற உணர்ச்சி.

3. எதூசா சைனபியம் (Aethusa Cynapium): சிறு பிள்ளைகட்கு இது சிறந்த மருந்து. பல் முளைக்கும்போது அஜீரணத்தால் பால் வெறுப்பு. குழந்தை பால்

குடித்தவுடன் பாலை அப்படியே வெகு வேகத்துடன் கக்குதல்.

4. அல்லியம் சீபா ( Allium Cepa ): பலமாக தும்மி கண்களினின்றும், மூக்கிலிருந்தும், தொண்டையிலிருந்தும் அதிக ஜலம், சளி வடிதல். மூக்கிலிருந்து வரும் நீர் காரணமாக இருக்கும்.

5. ஆலோ சொகோட்ரினா ( Aloe Socotrina ): இதன் உபயோகம் பெருங் குடலில் அதிகமுண்டு. வயிறு கட கட வென்று சப்தித்து வயிற்றுப்போக்கு ஏற்படுதல், மலத்தையடக்குவதற்கு முடியாமை. வெளிக்குப் போகும் என்று பயந்து வாயு பரியாமல் அடக்குதல். வாயு பரிந்தால் மலமும் கசிதல். ஒவ்வொரு பேதிக்கும் திராட்சப் பழக் கொத்தைப்போல் தொங்

கும் மூலம். ஆசனவாய் நிரம்பி இரத்தம் கட்டுதல்.

6. அனகார்டியம் ஓரியண்டல்: (Anacardium Orientale) ஞாபகக் குறைவு, மனக்கலக்கம், ஊக்கமில்லாமை, எதையும் மறந்து போகுதல், துக்கம், சபித்துத்திட்ட அதிக விருப்பம், மூளை இளைப்பு. சாப்பிட்டால் மட்டாகவும், மனச்சிந்தனையால் அதிகரிக்கும் தலைவலி, சரீரத்தின் சில பாகங்களில் துளைத்து அடித்தாற்போல் காணும் நோய், ஆகாரம் உட்கொண்டவுடன் நிற்கும் வயிற்று வலி. சொறி. இரத்தம் வரும்படி சொறிந்தாலும் நமைச்சல் அடங்குவதில்லை.

7. ஆண்டிமோனியம் குருடம்: (Antimonium Crudum) தோலில் ஏற்படும் வியாதிகள். இரைப்பை, ஆகாரக்குடல்

சளியால் நிரம்பி, குமட்டலெடுத்து, ஒவ்வொரு சமயங்களில் வாந்தியும் எடுத்தல். சுர சுரப்பான, பால் போன்ற வெண்மையான தடித்த மாசு படிந்த நாக்கு. பசியின்மை. வயிற்றுவலி. வயிற்றுப்போக்கு துர் நாற்றமெடுக்கும் வயிற்று வாயு. மலங் கட்டி பேதியாகுதல். முட்டை வெள்ளைக் கரு போன்ற சீதம், கசிந்து வரும் மூலம். சிறு பிள்ளைகளுக்கு உள்ள சிடுசிடுப்பான குணம். குழந்தைகளைப் பார்த்தாலுஞ்சரி, தொட்டாலும் சரி உடனே அவைகளுக்குக் கோபம் வருதல் அல்லது அழுதல். தயிர் போன்றவைகளை வாயாலெடுத்தல். முகத்தில் சுர சுரப்பான சொறி. சுகயீனமாகத் தோன்றும் முகம்.

8. ஆண்டிமோனியம் டார்டாரிகம்: (Antimonium Tartaricum) இது

பெருத்த குமட்டலையும், வாந்தியையும் கண்டிக்கும். நுரையீரலில் உண்டாகும் வியாதிகள், தொண்டை ஜவ்வில் சளி பிடித்துக்குரல்வளை-மார்பிற் சென்று கடைசியில் நுரையீரலையே பிடித்துக் கொள்ளும். மார்பில் அதிகம் சளி பிடித்து வெளியே கக்க முடியாமல், அவ்விடத்திலேயே 'கொர்-கொர்' என்று சப்தித்தல், தூக்கம் பிடித்து மூர்ச்சையாகப் போகுதல், மாந்த சன்னி, மார்ச் சளி, நியுமோனியா சுரம், சரீரத்தின் மேல் கொப்புளங்கள், அம்மை. சிறுவர் உபாதைகளுக்கு உபயோகப்படும் ஔஷதங்களில் இது ஒன்று.

9. அபிஸ் மெல்லிபிகா (Apis Mellifica): சருமத்தின் பற்பல இடங்களில் வீக்கம், கண் கீழ் இமைகள் வீங்கிப் பையைப் போல் தொங்குதல், பாண்டு வீக்

கம்: எரிந்து கொட்டுவதுப் போல் நொந்து, வீங்கியிருக்கும் அக்கி, தோல் பிசு பிசுவென்று இருந்து தொட்டால் சிலுத்தல். தூக்க மயக்கம். உஷ்ணம் தாங்க முடிகிற தில்லை. குளிர்ந்த ஜலம் குடிப்பதினாலும், காற்றில் வெளியே வருவதினாலும் கொஞ்சம் சௌக்கியம். மூத்திர உபாதைகளால் உண்டாகும் கை கால் வீக்கம். அடிக்கடி மூத்திரம் விடத்தோன்றுதல். ஆனால் முடிகிறதில்லை. அதி சீக்கிரம் சரீரம் இளைத்துப்போகுதல்.

10. ஆர்னிகா மொண்டானா: (Arnica-Montana) எப்பொழுதாவது அதிக அடிபட்டு விழுந்து அல்லது அதிக சரீர அப்பியாசத்தினாலும் அல்லது அதிக உழைப்பினாலும், பிணியாலும் தேகம் அதிகம் நொந்து அடித்துப்போட்டாற் போன்ற

வலி. அதிக உழைப்பினல் உண்டாகும் வாத நோய். நசுங்கிக் காயப்பட்டு பலஹீன மாகத் தோன்றுதல். படுக்கையைத் தொட்டால் கல்லைப்போல் கெட்டியாகத் தோன்றுதல். தூக்கம் வராமல் படுக்கையில் இங்கு மங்கும் புரளுதல், சரீரம் சில்லென்றிருத்தல், கடுமையான பிரசவ காலம், என்ட்ரிக் அல்லது டையாய்டு என்னும் குடல் காய்ச்சல், விஷக்கட்டிகள், வயிற்றுப் போக்கு, சீதபேதி, உடம்பினுள் இரத்தம் வடிதல், கக்குவாய், உடம்பு குளிர்ந்து, வலித்து, நடுக்கலெடுத்து வரும் காய்ச்சல். தேகத்தின் மேல் படும் காயங்களுக்கும், பல் பிடுங்கிய பின் வரும் பல்வலிக்கும் மேலே தடவ உதவும்.

**11.** ஆர்ஸனிகம் ஆல்பம்: (Arsenicum Album) திடீரென திரேகம் அதி

சீக்கிரத்தில் தளர்ச்சியடைந்து போகுதல், இங்கும் அங்கும் அதிகம் அசைதல், அதிக புலஹீனம், எரிச்சல், அதிகத்தாகம், சாவுக்கு பயம், குளிர்ச்சிபட்டால் அதிகரித்தல், மூடியிருக்கப் பிரியம், உதடுகள், வாய், தொண்டை வரண்டு போகுதல், வயிற்றில் எரிச்சல் உணர்ச்சி, கஷ்டமாக மூச்சு விடுதல், காய்ந்து, எரிச்சலுடன் சொறி நிறைந்த தேகம், கடுமையான ஜலதோஷம், மூக்கிலிருந்து நீர் வடிந்து கொண்டேயிருத்தல். இரைப்புநோய், முறைசுரம், மலேரியா, டைபாய்டு அல்லது என்ட்ரிக் என்னும்குடல் காய்ச்சல், குடியர்களின் வாந்தி, காலரா, எரிச்சல்எடுக்கும் இரணங்களிலிருந்து இரத்தமும், நாற்றமுள்ள சீழும் வடிதல், திரேக வீக்கம், குளிர்ச்சியான ஒற்றிடங்களினுல் சமனப்படும் தலைவலி.

12. பாப்டீஷியா: (Baptisia) டைபாய்டு சுரத்திற்குக் கைகண்ட மருந்து. மூன்று நாளில் காய்ச்சலை இறக்கி விடும். திடீரென்று தேகம் தளர்ந்து போகுதல், வயிற்றுப்போக்கு. உடலிலிருந்து துர் நாற்றம் வீசுதல், தலை, முதுகு, கை கால் களில் வலி, நாக்கு உலர்ந்து கபில நிறமாக மாறி மாவடைந்திருத்தல், தூக்க மயக்கம், மனக்கலக்கம்.

13. பாரிடா கார்ப்: (Baryta Carb) இது குழந்தைகளுக்கும், முதியோர்களுக் கும் உபயோகப்படும் ஔஷதம். வயதிற் குத்தகுந்த வளர்ச்சியடையாமலும், புத்தி யில்லாமலுமிருக்கும் பிள்ளைகள், கண்ட மாலையினாலும், தொண்டைப்புண்ணினா லும் கஷ்டப்படுகிறவர்களுக்கு மிகவும் நல்லது.

14. பெர்பெரிஸ் அக்யூபோலியம்: (Berberis Acquifolium) முகப்பருக்களுக்கு இது இன்றியமையாத ஒரு நல்ல ஔஷதம். தவிர நீடித்த சருமக்கோளாறுகளுக்கும் உபயோகமாகும். தாய் திராவகமாகவே உட்கொள்ளவேண்டும்.

15. பெர்பெரீஸ் வல்கேரிஸ்: (Berberis Vulgaris) மூத்திர கோசத்தைச் சார்ந்த வியாதிகள். இடுப்பு எரிந்து புண்ணுகி நோகுதல், தொட்டால் இன்னும் அதிகமாதல், கல்லடைப்பினுல் உண்டாகும் வயிற்று வலி.

16. பெல்லடோன்னு: (Belladonna) இது ஏறக்குறைய அக்கோனைட் போல்தான் குறிகள் காட்டும். அக்கோனைட்டில் குணப்படாமற் போனுல் பெல்லடொன்னுவில் குணப்படும். பற்களைக் கடித்தல், அதிக

கோபத்தினுல் புத்தி மாற்றம், வலது பக்கத் தலைவலி, கட்டிகள், இருமல், பல்கிட்டி மயக்கம் வருதல், குழந்தைகளின் வயிற்றுப் போக்கு, சீதபேதி, அதிக தாகம், பசி யின்மை, வயிறு உப்பல், வயிற்று வலி, வாந்தி, ஓக்காளம், வாந்தி பேதியும் அதைச் சார்ந்த கோளாறுகளும், சிவந்து ஊதிப் போய் கொதிக்கும் முகம், குழிக்குள் விழுந்த வரண்ட கண்கள், விரிந்த கண்கள், வெளிச்சத்தில் அதிகக் கண் கூச்சம், வெளிச் சமாவது சப்தமாவது பிடிக்காது. தலையில் இரத்தம் கட்டிப் போகுதல், கைகால் இசுவு, இடிக்கும் தலைவலி, ஜன்னி, கொஞ்சம் வெளிச்சத்தைப் பார்த்தாலும் அல்லது தேகத்தை அசைத்தாலும் தலைவலி அதிக மாகுதல், சிவந்து, வரண்டு புண்ணுகை நோகும் தொண்டை, ஏதோ குத்தியிருக் கிறுற்போல் தோன்றி விழுங்க சிரமமாக

விருத்தல், மூளை நரம்புத் தாரைகளைச் சார்ந்த வியாதிகள். காய்ச்சல் கண்டு உடல் மேல் சொறி, வியர்க்கோர்வை உண்டாகுதல், இன்ப்ளுவென்ஸா என்னும் காய்ச்சல், உடலில் எந்த பாகமாவது வீங்கி, அதிகம் சிவந்து, கொஞ்சம் தொட்டால் இன்னும் அதிகரிக்கும்படியான வலி, வாய்வு கட்டிகள் வரும்போதே கொடுத்தால் அவை மறைந்து விடும்.

17. போராக்ஸ் (Borax): குழந்தைகளுக்கு உபயோகப்படக் கூடிய ஔஷதம். குழந்தைகளை கீழேகிடத்தினால் அதுபயந்து தன்னைத் தூக்கியிருப்பவர்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளல், மேலேயிருந்து கீழே வரும்போது பயம். சிறிது சப்தம் கேட்டாலும் பயந்து அதைரியப்படுதல். வாயினுள்ளும் நாக்கின் மேலும் புண்கள்.

**18. பிரையோனியா (Bryonia) :** நடந்தால் உபாதைகள் அதிகமாகுதல், நோயுள்ள இடத்தின் மேல் படுத்தால் கொஞ்சம் சுகமாயிருத்தல். குடல் சுறுசுறுப்பில்லாதபடியால் ஏற்படும் மலக்கட்டு, நேரம் செல்லச் செல்ல அதிக தாகமெடுத்தல், நுரையீரல் வீக்கம். நியுமோனியா சுரம், நெஞ்சுச் சளி, மூக்குச் சளி, நெஞ்சு குத்தி சளியில்லாத கடுமையான இருமல், அதிக நெஞ்சு வலி, பித்தத் தலைவலி, வாத சுரம், மூட்டுக்களில் வலி, இடுப்பு வலி, ஈரல் நோய் இவைகள் யாவும் அசைந்தால் உபாதைகள் அதிகமாகும். அமுக்கிப் பிடித்தால் சமனமாகும். வாய்க் கசப்பு, அஜீரணம், பேதி, பெண்களுக்கு மூக்கில் இரத்தம் வடிதல், சாப்பிடும் போதும், சுடு தண்ணீர் சாப்பிடும் போதும் ஏற்படும் பல் வலி.

19. காக்டஸ் க்ராண்டிப்ளோரஸ் (Cactus Grandiflorus): இது எல்லாவித இருதய வியாதிகளேயும் கண்டிக்கும். இருதயம் இரும்புப் பட்டையினல் கெட்டியாகக் கட்டினற் போன்ற உணர்ச்சி, இருதயப் படபடப்பு, நெஞ்சு நோய், மூச்சு விடுவது கஷ்டம், சில்லென்று வியர்த்தல், தலே மயக்கம், இருதயத்தைக் குத்துகிருற் போல் தோன்றுதல் இவைகளேக் கண்டிக்கும்.

20. கல்கேரியா கார்பானிகா (Calcarea Carbonica): காசம், அஜீரணம், கண்டமாலே, குழந்தைகளின் எலும்புருக்கி நோய், பருமனை தேகமுள்ள வியாதியஸ்தனுக்கு சீக்கிரத்தில் சளி பிடித்தல், தலே அதிகம் வியர்த்து, தலேயணேயெல்லாம் நனேந்து போகுதல், புளியேப்பம், வயிற்றுப் போக்கு,

சிலுசிலுப்பு, புளித்த வாந்தி, புளித்தமலம், ஸ்தூல தேகமுள்ள குழந்தைகளுக்கு தலையும் வயிறும் பெருத்தல், தொண்டை நோகுதல், எலும்பு முற்றுதபடியால் நடக்கவாவது, நிற்கவாவது முடியாமை. பல் சீக்கிரம் வளருவதில்லை. காது செவிடு. காதில் சப்தித்தல், கிராணி, அப்பியாசம் இல்லாமையால் திரேகம் பருத்து அல்லது மெலிந்து போகுதல், மாதவிடாய் சீக்கிரமாகவும், அதிகமாகவும் காணுதல், பெண் மலடு.

21. காப்ஸிகம் (Capsicum): சீதபேதிக்குச் சிறந்த மருந்து, மலம் கழிப்பதற்கு முன்னும், போகும் போதும் வயிறு நொந்து, ஆசனவாய் எரிந்து, பிறகு இரத்தம் அல்லது சீதம், சில சமயங்களில் இரண்டும் போகுதல், கொல்லைக்குப் போன பின் அடி முதுகு நோகுதல், தாகம் அதிகமெடுத்

தல், வயிறு உப்பி சில்லென்று தோன்றுதல். வாய் நாற்றமெடுத்து, எதைச் சாப்பிட்டாலும் புளிப்பாக ருசித்தல், சில வேளை கொல்லைக்கு நுரைத்து பச்சையாக, சப்தத்துடன் கொஞ்சம் கொஞ்சமாகப் போகுதல். மூத்திர கோசம் எரிச்சல் எடுத்து சில வேளை நொந்து ஒன்றுக்கு துளித்துளியாகப் போகுதல், சில சமயம் ஒன்றுக்கு வரும் போல் தோன்றி அப்புறம் வருவதில்லை.

22. காம்போரா (Camphora): இது உஷ்ண கால பேதிக்கும், வாந்தி பேதிக்கும் சிறந்தது. திடீரென்று வரும் வாந்தி பேதி, உடம்பு சில்லென்று ஆகுதல். அப்படியிருந்தும் உடம்பின் மேல் துணி போடப் பிரியமிராது. திரேகம் தளர்ச்சியடைதல், கை கால், அடிவயிறு மறத்துப் போகுதல், இது சாதாரணமாக வாந்தி பேதி ஆரம்பத்தி

லேயே 10, 15 அல்லது 20 நிமிஷங்களுக்கு ஒரு தடவை 3 அல்லது 5 துளி கொடுத்து வந்தால் சுகமாகிவிடும்.

23. கன்னபிஸ் ஸடிவா (Cannabis Sativa): இதை முக்கியமாக வெட்டைச் சூட்டின் ஆரம்பத்திலேயே உபயோகித்தால் உடனே சொஸ்தமாகும். மூத்திரம் பெய்யும் போது எரிச்சல்; மூத்திரத்தாரையைத் தொட்டாலும், அழுத்தினாலும் அதிகம் நோகுதல், கால்கள் பின்னி, நடக்கக் கஷ்டப்படுதல்.

24. காந்தாரிஸ் வெசிகடோரியா (Cantharis Vesicatoria): மூத்திரக் கருவிகளைச் சார்ந்த வியாதிகள், அடிக்கடி ஒன்றுக்குப் போகுதல், திடீரென்று, அடக்க முடியாதபடி ஒன்றுக்கு வருதல், மூத்திரம் பெய்யும்போது மூத்திரத்தாரையில் எரிந்து

நோகுதல், சம்போகத்திற்கு அதிகப் பிரியம், வெட்டை. கால் பாதத்தில் கொப்புளங் கள், சீத பேதி. தீச்சுட்ட புண்களுக்கு இதன் களிம்பை உபயோகிக்கலாம்.

25. கார்போ விஜிடபிலிடிஸ் (Carbo Vegetabilitis): அஜீர்ணம், சாதாரண ஆகாரமும் ஜீரணமாகிறதில்லே. இரப்பையிலும், குடலிலும் வாய்வு மிச்சத்தினுல் புளியேப் பமும், நெஞ்செரிச்சலும் உண்டாகுதல், ஏப்பம் விட்டால் கொஞ்சம் சௌக்கியமாகுதல். அதிகக் கனமான ஆகாரம் அல்லது நேரஞ் சென்று சாப்பிடுவதினுல் பேதி தாளுகவும், பிண நாற்றத்துடனும் போகுதல், வியாதி முற்றிப்போய் பின் வரும் குறிகள் தோன்றும் சமயங்களிலும் இவ்வௌஷதம் கொடுக்கப்பட்டால் உயிர் பிழைக்க மார்க்கமுண்டு. கை கால், விரல்கள் சில்லிட்டுப்

போகுதல், அதிகமாக சில்லென்று வியர்த்தல், சில்லென்று மூச்சு விடுதல், நாக்கு சில்லிட்டு, குரல் அடைத்து, விசிறிக் கொள்ளப் பிரியப்படுதல்.

26. காலோபில்லம் (Caulophyllum): இவ்வௌஷதம் முக்கியமாகப் பெண்களுக்கு உபயோகப்படும். சருப்ப காலத்திலும், பிரசவத்திற்குப் பின்னும் தோன்றும் வியாதிகள். சிறு கணுக்களில் அடிக்கடி மாறும் நோய் உண்டாதல், கணுக்கள் முடக்கு, பெண்களின் பெரும்பாடு, கருப்பையைச் சார்ந்த வியாதிகள், பிரசவத்திற்கு முந்தி சில நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் பிரசவம் சுலபமாகும்.

27. சாமோமில்லா (Chamomilla): இது சிறு பிள்ளைகட்கும், ஸ்திரீகளுக்கும் சிறந்த மருந்து. பிள்ளைகட்கு அதிக

உணர்ச்சி, பொறுமையில்லாமல் சீக்கிரத்தில் கோபம் வருதல், தாகம், இரவில் நோய் பொறுக்க முடியாமல் பிள்ளைகள் அழுதல், குழந்தைகள் ஒரு பொருளைக் கேட்டு, அதைக் கொடுக்கும்போது வேண்டாமென்று தள்ளுதல். தூக்கிக்கொண்டால் மாத்திரம் சும்மாயிருத்தல், காது நோய், தாடை ஒரு பக்கம் சிவந்து கொதித்து, மறு பக்கம் வெளுத்து சில்லென்று காணுதல். பல்வலி அதிகரித்தல், வாய்க் கசப்பு, பித்த வாந்தி, வயிறு உப்பி முறுக்கி வலித்தல், வாயுவினால் வயிற்று வலி, மலம் கொதித்து பச்சையாயும், சீதளமாயும், துர்நாற்றத்துடன் தண்ணீராகப் போகுதல், சளியில்லாத வெறும் இருமல், பிள்ளைகளின் மார்சளி, காய்ச்சல், அரைத் தூக்கத்தில் முணமுணுத்தல், சிசு ஜன்னி, பற் கழிச்சல் முதலியவைகளுக்குச் சிறந்த

மருந்து. அதி சீக்கிரத்தில் கோபம் வரும், பொறுமையில்லாத ஸ்திரீகளுக்கு இது கைகண்ட ஔஷதம். இம்மருந்து சாந்த குணமுள்ள ஸ்திரீகளுக்குப் பிரயோஜனப்படாது. பெண்களுக்குள்ள பெரும்பாடு, பிரசவம் ஆனபின் வரும் வயிற்றுவலி, ஜலம் அதிகம் வடிதல் அல்லது நின்று போதல், பிரசவ ஜன்னி, பால் வற்றல், ஸ்தனம் விம்முதல் முதலியவைகளை வெகு எளிதில் கண்டிக்கும்.

28. செலிடோனியம் (Chelidonium Majus): இந்த மருந்து முக்கியமாக ஈரல் வியாதியைக் கண்டிக்கும். இதன் குணங்கள் வலது தோள் அடியில் நோய், மஞ்சளான நாக்கு, ருசியின்மை, மஞ்சட்காமாலை, ஈரல் விம்முதல்.

29. சீனு (Cina): இது குழந்தைகளுக்கு நாக்குபூச்சி எடுக்கும் மருந்து. குழந்தைகளுக்கு அதிகக் கோபம் வருதல், தூக்கச் சொல்லுதல், தூங்கினலும் சுகமில்லை. தொட்டாலும் கோபம் அதிகம், எப்போதும் மூக்கையே தேய்த்துக் கொண்டும், தோண்டிக்கொண்டும் இருத்தல், தூக்கத்திற் அலறி அழுதல், விழித்தபின் பரிதாபமாக அழுதல், பற்களை நறநறவென்று கடித்தல், சாப்பிட்டபின் மறுபடியும் பசியெடுத்தல், சிசு ஜன்னி, 200 வீரியத்தில் வாரத்திற்கு ஒருதரம் கொடுக்கவும்.

30. சிமிசிப்யூகா (Cimicifuga): இது ஸ்திரிகளின் வியாதிகளை முக்கியமாகக் கண்டிக்கும். வாயுவினல் கழுத்திலும், முதுகிலும் அதிகவலி, நடு முதுகெலும்பைத் தொட்டால் வலி, உச்சந்தலை பறந்து

போகும்போல் தலையில் அதிக உஷ்ணம். இக்குறிகளெல்லாம் கர்ப்பப்பையின் உபாதைகளால் உண்டாகிறது. மாதவிடாய் தாமதித்தாவது தாறுமாறுகவாவது வருதல், அல்லது நின்று விடுதல், இருதயப் படபடப்பு, அடிமுதுகு வலி.

31. சைன (China): இரத்த நஷ்டத்தினலும், குழந்தைக்கு வெகுநாள் பால் கொடுப்பதினலும், அதிக பேதியினலும் அதிக ஸ்திரீ சம்போகத்தினலும் வரும் திரேகத்தளர்ச்சி, வெளுத்தமுகம், கண்களைச் சுற்றி கருப்பு வட்டம் தோன்றி, கண் குழி விழுதல், மண்டை வெடித்துவிடும் போல் தோன்றும் தலைவலி, வயிற்றில் அதிக வாயு, பசியின்மை, மஞ்சட்காமாலை, மண் ஈரல் விம்மல், ஒரு நாள் விட்டு ஒரு நாளாக

ஏழு அல்லது பதினன்கு நாள் அடிக்கும் முறைக் காய்ச்சல்.

32. காக்குலஸ் இண்டிகஸ் (Cocculus Indicus): பெண்களுக்குறிய மாதவிடாய், பெரும்பாடு, பாரிச வாயு, அஜீர்ணம் முதலியவைகளைக் கண்டிக்கும். குதிரை மேலாவது, ரயில், டிராம், மோட்டார், வண்டி, படகு, கப்பல் பிரயாணஞ் செய்வதால் வரும் வாந்தி குமட்டல். சிலருக்குத் தண்ணீரில் போகும் படகைப்பார்த்தாலும் குமட்டல் உண்டாகும். பின் தலையில் வலி, கைகால் நடுக்கல், அதிக மயக்கம், கண்விழிப்பதாலும், தூக்கமில்லாததாலும் கவலையினலும் உண்டாகும் கோளாறுகளை நன்ருகக் கண்டிக்கும்.

33. காபியா க்ரூடா (Coffea Cruda): இது குழந்தைகளுக்கும், வயது சென்ற

வர்களுக்கும் தக்க மருந்து. தூக்கமின்மை, ஒற்றைத்தலை வலி, பேதி, பல்வலி, பெரியவர்களுக்குக் கவலையால் வரும் தூக்கமின்மை.

34. கோல்சிகம் (Colchicum): ஆகாரத்தில் வெறுப்பு. எந்த ஆகாரத்தின் வாசனையும் குமட்டலை உண்டாக்குதல், சில வேளைகளில் ஆகாரத்தைப் பார்த்தாலே குமட்டலும், வாந்தியும், மூர்ச்சையும் ஏற்படும். இக்குறிகள் இருப்பின் உடம்பில் வாயு, சீதபேதி, பேதி, வாத ரோகம் முதலிய நோய்கள் உண்டென்று அடையாளம். எலிகளைப் பற்றிக் கனவுகள்.

35. காலோஸிந்திஸ் (Colocynthis): இது அஜீரணத்தால் வரும் கடூரமான வயிற்று வலி, உஷ்ணபேதி, சீதபேதி, வலியேற்படும் பொழுது சரீரத்தை இரண்

டாக மடித்துக் கொண்டும், அடி வயிற்றை அமுக்கிக்கொண்டும் இருப்பார். உடம்பு வலி, ஸ்திரீகளின் பெரும் பாடு, தலைவலி, வாந்தி முதலியவைகளைக் கண்டிக்கும்.

36. கோனியம் (Conium): இவ்வௌஷதம் முக்கியமாக தேகத் தளர்ச்சியடைந்த பெரியவர்களுக்குத் தகுந்தது. விழுந்து அல்லது அடிபட்ட பின்வரும் கோளாறுகள். கண்டமாலை, அதிக ஸ்திரீ சம்போகத்தினால் உண்டாகும் வியாதிகளையும், இச்சையையடக்கும் ஆண்களுக்கு வரும் வியாதிகளையும், படுக்கும்போதும் அல்லது திரும்பும்போதும் வரும் தலைமயக்கம் முதலியவைகளைக் கண்டிக்கும்.

37. குரோட்டன் டிக்லியம் (Croton Tiglium): இது தண்ணீராகப் போகும் பெரும் பேதியை குணமாக்கும். வயிற்றுப்

போக்கு வெகு மும்மரமாகப் போகும். ஆகாரமாவது தண்ணீராவது வயிற்றுக்குள் சென்றால் இன்னும் அதிகம் போகும். உடம்பெல்லாம் ஜலம் வடிந்தும் நமைச்சல் எடுக்கும். சொறி, சிரங்கு, புண்கள் முதலியவைகளுக்கும் பிரயோசனப்படும்.

38. குப்ரம் மெட்டாலிகம் (Cuprum Metallicum): இந்த ஔஷதத்தின் குறிகள் எல்லாம் நரம்புத்தாரைகள் மேல் தான். கைகால் இசிவு, மறத்துப் போகுதல், முகம் நீலமாகிக் கை கால் குத்துப் பிடித்து வரும் ஜன்னி, கை கால் விரல்கள் ஆரம்பத்தில் மறத்து பிறகு தேகமெல்லாம் மறத்துப் போகுதல், வாந்தி பேதி, முகம் நீலமாகி மூச்சு பேச்சு இல்லாமல் திணறி வரும் குழந்தைகளின் கக்குவாய், கைகால் மறத்து

இசிவு வரும் எந்த வியாதிக்கும் இந்த மருந்தைக் கொடுக்கலாம்.

39. டிஜிடாலிஸ் (Digitalis): இது ஹிருதய நோய்க்கு ஏற்ற மருந்து. அசைந்தால் இருதய ஓட்டம் நின்று விடும்போல் தோன்றுதல், நெஞ்சில் அதிக பலவீனம், பேச முடியாது, முகம் சாவு முகத்தைப் போல் வெளுத்து, நாடி மிகவும் மெதுவாகவும் விட்டு விட்டும் அடித்தல், இருதயம் வியாதியுற்று மூத்திரம் போகாமல் தேகம் வீங்கிப் போகுதல், இவ்வௌஷதத்தை இரண்டொரு நாளைக்குத் தான் கொடுக்கலாம். அதற்கு மேல் கொடுத்தல் கூடாது.

40. டயஸ்கோரியா (Dioscorea): குடலை யாரோ கெட்டியாகப் பிடித்து முறுக்குகிறாற்போல் வரும் கடுமையான வயிற்று வலி, இதனால் வியாதியஸ்தர்

நடந்து கொண்டிருக்க நேரிடும். நேராக நிற்பதினாலும், பின்னால் வளைவதனாலும் வலிசற்று சமனப்படும்.

41. டிரோஸிரா (Drosera): கக்குவாய் இருமல், தொண்டை கம்மி, சப்தமாக வரும் இருமல், நடு ராத்திரிக்குப் பின் படுத்தால், தொண்டை குத்தி இருமல் அதிகமாகுதல், மூச்சுத் திணறி, குமட்டி வாந்தியெடுக்கச் செய்யும் இருமல் முதலிய வைகளைக்கண்டிக்கும்.

42. டல்கமாரா (Dulcamara): உஷ்ண காலம் குளிர்காலமாக மாறும் பொழுதும் சில்லென்று இருக்கும் மழையில் நனைந்த தினாலாவது அல்லது வெற்றுடம்புடன் இருந்ததினாலாவது ஏற்பட்ட ஜலதோஷத் தை இந்த மருந்து கண்டிக்கும். ஜலதோஷத் திற்கும், கை கால் வலி, வாயு, இருமல்,

மூக்கில் ஜலம் வடிந்து தும்மல், பேதி, முதுகு வலி, முதலியவைகளுக்கும் ஏற்ற ஔஷதம்.

**43. யூபடோரியம் பார்போலியேடம்** (Eupatorium Perfoliatum): உடம்பெல்லாம் அடித்தாற்போல் நோகுதல், எலும்புகள் நோகுதல், மூட்டுகளெல்லாம் விட்டுவிட்டாற்போல் தோன்றுதல், காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது மணிவரை வரும் குளிர்காய்ச்சல், சுரம் வரும்போதும் அதன் முன்னும் எடுக்கும் தாகம்.

**44. பெர்ரம் மெட்டாலிகம்** (Ferrum Metallicum) இவ்வௌஷதத்தை தேகம் மெலிந்து இரததமில்லாதபோது கொடுக்கலாம். முகம், உதடு அதிகம் வெளுத்தல், கொஞ்சம் நொந்தால் மூக்கு சிவந்து விம்மல், வேலை செய்தாலும், கோபம்

வந்தாலும், சாப்பிட்டாலும், குடித்தாலும் அல்லது இளைப்பாறினாலும் அதிகரித்தல். நடந்தால் சற்று சுகம். பேதி இரவிலாவது சாப்பிடும்போதாவது அல்லது குடிக்கும் போதாவது ஜீரணமாகாமல் பேதியாகுதல். மாதவிடாய் அதிகமாகவும் அடிக்கடியும், நீடித்தும், தண்ணீர் போன்றும், பலவீனப் படுத்துவதாகவும் இருத்தல்.

45. ஜெல்சிமியம் (Gelsemium): தசைகளெல்லாம் தளர்ந்து போகுதல், நாக்கு, கை கால், சரீரம் முழுவதும் பலம் ஒடுங்கி நடுக்கல் எடுத்தல், திமிர்வாதம், மெத்த பலவீனமாகி, காய்ச்சல் வருதல், முதுகு எலும்பு சில்லென்று தாகமில்லாமல், சிலு சிலுப்பு மேலுக்கும் கீழ்க்கும் சென்று, விட்டு விட்டு வரும் காய்ச்சல் இவைகளை கண்டிக்கும்.

46. க்ளோனுயின் (Glonoine): வெய்யிலில்போய் நேர்ந்த சூரிய இடிக்கும், சூரிய உஷ்ணத்தினுல் உண்டாகும் தலைவலிக்கும் இது கைகண்ட மருந்து. இரத்தம் தலைக்குப் பாய்ந்து போய், கொஞ்சம் தொட்டாலும், அசைத்தாலும் பட்பட் என்று மண்டை வெடிக்கும் போல் தோன்றும் தலைவலியை குணமாக்கும்.

47. காஸ்டிகம் (Causticum): பாரிசவாயுக் கோளாறினுல் சிறு நீர் உள்ளடக்கப்படுதல் அல்லது கொஞ்சம் கொஞ்சமாகச் சொட்டிக் கொண்டேயிருத்தல், மாதவிடாய்க் காலங்களில் பயங்கரமான கனவுகள், பசி, ஆனுல் ஆகாரத்தைக் கண்டவுடன் பசி மறைந்து விடல், வயிற்றினுள் சுண்ணைப்பு வேகவைப்பது போன்ற உணர்ச்சி.

காதில் குருப்பி சேருதல் அல்லது கெட்டியான சீழ் ஒழுகுதல்.

48. கிராபைடிஸ் (Graphites): அசுத்தமான சரீர மேல் தோல், கொஞ்சம் காயப்பட்டாலும் சீழ் பிடித்தல், காதுகளிலும், கை கால் விரல்களுக்கிடையிலும், சரீரத்தின் பல பாகங்களில் சிரங்கு, அதிலிருந்து தெளிவானதும், பிசுபிசுப்புள்ள நீர் வடிதல், கைகளில் சிரங்கு, வெடிப்புக்கள், கபில நிறமுள்ள நாற்றமுள்ள பேதி, மலம் கட்டி வெகு கஷ்டமாக போகுதல், மாதவிடாய் கொஞ்சமாகவும், வெளுத்தும், தாமதமாகவும் கடூரமான வயிற்று வலியோடும் காணுதல், இத்துடன் வெள்ளை, இராப்பகல் முழுவதும் வெள்ளமாகத் திரண்டு விழுதல், இவைகளைக் குணமாக்கும்.

49. ஹாமாமெலிஸ் (Hamamelis): சரீரத்தின் இரத்தத் தாரைகளிலிருந்து மூக்கின் மூலமாவது, நுரையீரலிலிருந்தாவது வயிற்றிலிருந்தாவது கருப்பையிலிருந்தாவது இரத்தம் வடிந்தால் அவைகளை இவ்வௌஷதம் நிவர்த்திக்க வல்லது. வியாதியுற்ற பாகங்களில் அடிபட்டாற் போல் நோகுதல், எல்லாவித மூல வியாதிகளும் குணமாகும். விழுந்து காயம்பட்டு இரத்தம் வடியும் பொழுது அந்த இடத்தில் இவ்வௌஷத திராவகத்தைத் தடவினால் இரத்தப் பெருக்கை அது உடனே நிறுத்திவிடும்.

50. ஹிபார் சல்பியூரிஸ் (Hepar Sulphuris): குளிர்ந்த காற்று பட்டவுடனே வியாதியஸ்தருக்கு உணர்ச்சியுண்டாதல். இதனால் வெயிற்காலத்திலும்கூட உடம்பை நன்றாக மூடியிருத்தல் வேண்டும்.

சரீரம் அதி சீக்கிரத்தில் உலருதல், வியாதியுற்ற சரீர மேல்தோல் கொஞ்சம் காயப்பட்டாலும், சீக்கிரத்தில் சீழ்ப்பிடித்தல், குளிர் காற்றில் இருந்ததினால் உண்டாகும் இருமல், தொண்டையை இறுத்தும் மாந்த சன்னி, தோலின் மேல் உண்டாகும் எல்லா வியாதிகளும், எல்லாவிதக் கட்டிகளும், விரல் சுற்றி முதலியவைகளை சீக்கிரத்தில் சீழ்பிடித்து பழுக்கவைத்து குணமாக்கி விடும்.

51. ஹைட்ராஸ்டிஸ் (Hydrastis): இது பலவீனத்தாலும், அஜீரணத்தாலும், மலக் கட்டினாலும் உபத்திரவப்படும் வயது முதிர்ந்தவர்கட்குத் தக்க மருந்து. இம் மருந்து கண்டிக்கும் மற்றக் குறிகளாவன: தலைச் சிரங்கு, காதில் சீழ்வடிதல், மூக்கில் ஜலம் வடிதல், செவிடு, தொண்டைப் புண்,

இளம்பெண்களுக்குண்டாகும் தொண்டைக் கழலை, அஜீர்ணம், நாக்குக் கசப்பு, இரைப் பையில் கட்டி, மஞ்சட்காமாலை, கல்லடைப்பு, பவுத்திர வியாதிகள், மேக வெட்டை, மார்பில் கட்டி, முலைக் காம்பு உள்ளுக்கு அழுங்கல், முதியோருக்கு வரும் ஜலதோஷம், சரீரத்தின் மேல் கிளம்பும் பற்பல சொரிகள், கொப்புளங்கள் அதிகம் வியர்த்தல், மனச்சஞ்சலம், சாவை விரும்புதல் முதலிய குணங்களுள்ள வியாதிகளைக் கண்டிக்கும். 200 வீரியத்தில் உபயோகித்தால் சீக்கிரம் சுகமாகும்.

52. ஹையாஸ்யாமஸ் (Hyascyamus): மிருதுவான பிதற்றல், மிகுந்த பலவீனம், நாளுக்கு நாள் அதிகரித்தல், படுக்கையில் பூச்சிகள் ஊர்வது போலும், அதைப் பிடிக்க முயலுவார். சித்தப்பிரமை,

பைத்தியம். கொடுக்கப்படும் மருந்தை விஷமென சந்தேகித்தல், தனக்கு எதிராக பிறர் சதிசெய்வதாக எண்ணம், பொறாமை, காம விகாரம், துணிகளை அவிழ்த்துப் போட்டு நிர்வாணமாக இருத்தல், விகாரமான வார்த்தைகளைப் பேசுதல், வறட்டு இருமல்-படுத்திருப்பதால் அதிகமாகவும், உட்கார்ந்திருந்தால் சௌகர்யமாகவும் இருத்தல்.

53. இக்நேஷியா (Ignatia): பலவீனமும், அதைரியமும் உள்ள வியாதியஸ்தர்களுக்குத் தக்க மருந்து. சந்தோஷமாக இருப்பவர் திடீரென்று விசனப்படுதல், சிடுமூஞ்சிகளாகவும், காரணமில்லாது கோபப்படும் ஸ்திரீகளுக்கு ஏற்றதொரு ஔஷதம். கோபம், வருத்தம், ஏமாற்றம் முதலியவற்றிற்குப் பின்வரும் கோளாறுகள். தூங்கும்

போது திரேகம் முழுவதாவது அல்லது கை கால் ஏதாவது துடித்து வலிப்பு வருதல், தாகம் இல்லாமல் வரும் காய்ச்சல், முறைச் சுரம், சூடான ஒற்றிடங்களினால் கொஞ்சம் சுகமாகும், சிலுசிலுப்பும் குணமாகும்.

54. இபிகாக்உனு (Ipecacuanha): இரைப்பை, நெஞ்சு, தொண்டை இவைகளிலுள்ள மெல்லிய ஜவ்வையடுத்த வியாதிகளைக் கண்டிக்கும். அதாவது வயிற்றுபேதி, சீதபேதி, வாந்தி, குமட்டல், இருமல், சளி, சிகப்பு இரத்தம் கக்கல், கர்ப்பப்பையிலிருந்து இரத்தம் வெள்ளமாக வடிதல், அஜீரணத்தால் வாய் குமட்டி, தலைநோய் கண்டு, கைகால் சில்லென்று குளிர்ந்து, இருமல் கண்டு, உடல் மேல்பாகம் வியர்த்து வரும் காய்ச்சலை நன்றாகக்

கண்டிக்கும். பேதியாகும்போது இரைப்பை தொங்குவது போல் தோன்றும். பேதி பச்சையாயும், நுரைத்துக் கொண்டும், பிசுபிசுப்பாயும் இருக்கும். குழந்தைகளுக்குக் கக்குவாய் காணும்போது திக்கு முக்காடி, முகம் வெளுத்து வாயடைத்து, பிறகு சளியை வாந்தி எடுக்கும். இவ்வாறு கஷ்டப்படும்போது இவ்வௌஷதத்தை உபயோகிக்கலாம்.

55. காலீ பைக்ரோமிகம் (Kali Bichromicum): இது சளியுண்டாக்கும் ஜவ்வுகளைச் சார்ந்த வியாதிகளைக் கண்டிக்கும். சளியானது கட்டிப் போய் இழுத்தால் கவர் கவராகவும், ஒட்டிக் கொண்டுமிருக்கும். வெகு நாள் சென்ற மார்ச்சளி, மூச்சு விடுவதற்கு கஷ்டமாயும், கொர் கொர் என்னும் இருமல், புண்ணான தொண்டை, தொண்

டைக் கம்மல், வெகு நாள் சென்ற அஜீர்ண வியாதி, நெஞ்சு எரிச்சல், ஏப்பம், குமட்டல், நாக்கு மஞ்சளாயும், அடர்த்தியாய் மாவு படர்ந்தும், வாய் ருசியற்று இருக்கும் போதும் இது தக்க மருந்து.

56. காலீ கார்பானிகம் (Kali Carbonicum) பிடிப்பு வலிகள், தலை வலி, திரும்பினால் தலை கிறுகிறுப்பு, வயிற்று உப்பிசம், இறைப்பு, ப்ராங்கைடிஸ், உபாதி நடு இரவிலோ அல்லது விடியற்காலையிலோ அதிகரித்தல், உமிழ் நீர் அடிக்கடி ஏராளமாக உற்பத்தியாகுதல்.

57. கிரிசோட்டம் (Kresotum): பல் வலி, பல் முளைக்கும் பருவத்தில் அதிக வலி, ஈறுகளில் இரத்தம் வருதல், இரணம். மாத விடாய் அதிகம் நீடித்து இருத்தல், வியாதியஸ்தர் படுத்திருக்கும் போது அதிகப்

பெருக்கும், உட்கார்ந்து கொண்டோ அல்லது நடந்து கொண்டோ இருந்தால் பெருக்குக் குறைவாகவும் இருக்கும்.

58. லாச்செஸிஸ் (Lachesis): எந்த வியாதியும் உடம்பின் இடது பக்கத்தில் ஆரம்பித்து வலது பக்கம் போகும், தொட்டால் அதிக உணர்ச்சியுண்டாகும். தொண்டையைச் சுற்றியாவது, இடுப்பைச் சுற்றியாவது ஏதாவது இருந்தால் பிடிக்காது எல்லாக் குறிகளும் இரவிலோ பகலிலோ தூங்கி எழுந்தவுடன் அதிகரிக்கும். வியாதியஸ்தர் நாக்கை வெளியே நீட்ட அதிக சிரமப்படுவார். நாக்கு உலர்ந்தும், நடுக்கலுடனும் இருத்தல்.

59. லைகோபோடியம் (Lycopodium): வெகு நாள் சென்று வேரூன்றி அதிகரித்து வரும் வியாதிகளுக்குகந்த ஔஷதம்.

வியாதி வலது பக்கத்தில் தோன்றி பிறகு இடது பக்கம் போகுதல். சாயங்காலம் 4 மணியிலிருந்து 8 மணி வரையில் உபாதைகள் மும்மரமாகவிருத்தல். அஜீரணத்தால் வரும் வியாதிகள். அடிவயிற்றில் வாயு அதிகம் சேர்ந்து, கடகடவென்று சப்தித்தல். நல்ல பசியிருக்கும். கொஞ்சம் சாப்பிட்டாலும் தொண்டைவரை நிறைந்தாற் போல் திருப்தியாகத் தோன்றுதல். வெளிக்கு வருவது போன்றிருத்தல்; ஆனல் ஒன்றும் போவதில்லை. மூத்திரம் சிவந்திருத்தல், வாலிபரிடையே துர் அப்பியாசங்களினல் ஏற்பட்ட நபும்சகத்தும். வயதானவர்களுக்கு இருக்கும் அதிக இச்சை; ஆனல் பூர்த்தி செய்துகொள்ள முடியாதிருத்தல்.

60. மெற்கூறியஸ் சொலுபுலிஸ் (Mercurius Solubulis): இவ்வௌஷதம் கண்டிக்

கும் வியாதிகள் அனேகம். எனினும் முக்கியமானவை சிலதுதான் இங்கு குறிக்கப்படுகின்றன: எந்தக் கட்டியையும் ஆரம்பத்திலேயே உடைத்துவிடும். அது எங்கேயிருந்தாலும் குணமாக்கிவிடும். சீதபேதி, பேதி, பல்நோய், முக்கியமாகச் சொத்தைப் பல்லினால் வருவது; ஈரு வீங்குதல், தலைவலி, மூக்கில் ஜலம் வடிதல், சீழ் வடிதல், நாக்கில் அட்சரம், அதிக தாகம், நாக்கு வீக்கம், அதிக எரிச்சல் வருவது, புட்டாளம்மை, வாய் நாற்றம், மஞ்சட்காமாலை, வயிற்று வலி கண்டு மூர்ச்சையாகப் போகுதல், பெண்களின் வெட்டை நீர், மார்பு நோய், சரீரத்தின் மேல் வரும் சிரங்குகள், இரவில் வியாதி உக்கிரமாகுதல், அதிகம் வியர்த்தும் வியாதி குறைகிறதில்லை. தொண்டை வீங்கி விழுங்க முடியாமல் அதிகம் நோகுதல். அசுத்தமான ஸ்திரீ சம்

போகத்தினால் வரும் மேகவெட்டை, கிரந்தி புண் இவைகளைச் சொஸ்தமாக்கும்.

61. மெர்கூரியஸ் கரோசிவஸ் (Mercu--rius Corrosives): சீத பேதிக்கு இது மிகவும் உபயோகமுள்ள ஔஷதமாகும். உஷ்ணபேதி, ஆசன வாயும், மூத்திரக் குழலும் கடுகடுத்தல், அதிக உபத்திரவத்துடன் போகும் வயிற்றுப் போக்கு. மலம் கொஞ்சமாகவும், இரத்தத்துடனும், சீதமர்கவும் கொதித்து நாற்றமெடுத்தல். மூத்திரம் கொதித்து கொஞ்சம், கொஞ்சமாக எரிச்சலெடுத்து வெளிவருதல். மேக வெட்டை முற்றிப் பச்சையாய் ஒழுகுதல்.

62. நேட்ரம் மியூரியாடிகம் (Natrum Muriaticum): இம்மருந்து முக்கியமாக உஷ்ணக் காலத்தில் திரேகம் வெளுத்து, பல வீனமாகப் போகும் வியாதியஸ்தர்களுக்கு

ஏற்றது. சூரியோதயத்திலிருந்து அஸ்த மிக்கும் வரை மண்டையுடைகிறாற் போல் இருக்கும் தலைவலி. ஆசனத்தில் ஏதோ அடைத்துக் கொண்டிருப்பது போன்று புண்ணாகத் தோன்றும் மலக்கட்டு. மலம் வெளிக்குப் போகாமல் கஷ்டப்படுவது. விட்டு விட்டு வரும் காய்ச்சல். காலை 10 அல்லது 11 மணிக்கு சில்லென்று குளிர்ந்து பிறகு கடுமையான தலை வலியோடு வரும் நாள் சென்ற காய்ச்சல்.

63. **நைட்ரிக் ஆஸிட்** (Nitric Acid): மார்பில் ஜலதோஷம். பேதி, சீத பேதி, சரீரத்தின் உட்பாகங்களும் மேல் தோலும் சந்திக்கும் இடங்களில் ஏற்படும் புண்கள், ஸ்திரீ வியாதியாலுண்டான அரையாப்பு, கிரந்திப் புண் (Syphillis), மூலம், நியு மோனியா காய்ச்சல், எல்லாவித தொண்டை

நோய்கள் முதலியவைகளைக் கண்டிக்கும். அசுத்தமான ஸ்திரீ சம்போகத்தினாலுண்டாகிய சிரங்கு முதலியவைகளை ரசம்சேர்ந்த மருந்துகள் கொடுத்தும் பலனில்லாமற் போனால் இந்த மருந்தை உபயோகிக்கலாம்.

64. நக்ஸ் வாமிகா (Nux Vomica): இது அஜீரணத்தினால் வரும் வயிற்று வலி, வாந்தி, தலைவலி, புளியேப்பம், வாய்க் கசப்பு, வயிறு ஊதல், மலக்கட்டு, பேதி, காலை இருமல், முதுகு நோய், கால் மறத்துப் போகுதல், வயிற்றில் வாயு, பசியின்மை, அதிக தாகம், சீத பேதி, கை கால் ஓய்ச்சல், சாயங்காலப் பல் வலி, மூலம், கைகால் பிடிப்பு, காய்ச்சல், ஜலதோஷம், காலை 3 மணிக்குப் பின் தூக்கமின்மை, வெளிக்கு வருவது போன்றிருத்தல், ஆனால் ஒன்றும் போவதில்லை, பெண்களின் பெரும்

பாடு, நீரடைப்பு, கண் விழிப்பு, அதிகக் கவலை, போஜனப் பிரியம், நிரம்பக் கனமான ஆகாரம், காப்பி, புகையிலை, சாராயம் இவைகளை அதிகமாகச் சாப்பிட்டதினால் ஏற்படும் கோளாறுகள், மூல வியாதிக் காரர், மலக்கட்டானவர்கள், கோபக் காரர், சதா ரோக பயமுடையவர்கள், சுறுசுறுப்பானவர்கள் முதலியவர்களுக்குத் தக்க மருந்து, வியாதிகள் காலையிலேயே மும்முரமாயிருத்தல்.

65. ஓபியம் (Opium): மடத்தன மாக நடத்தல், நெடுந்தூக்கம் அல்லது சுரணையில்லாமல் இருத்தல், முதுகும் கண்களும் சிவந்தும், பாதி திறந்த வண்ணமுமாகக் குறட்டை விட்டுக் கொண்டு தூங்குதல், பக்கங்களில் ஏற்படும் சிறு சப்தத்தினாலும் தூக்கம் கலைதல்,

அதனால் தூக்கமின்மை, கை கால், மற்ற பாகங்கள் தானே அசைதல், நடுக்கல் எடுத்தல், மலக்கட்டு, வெளிக்குப் போகவே பிரியமில்லை ஏதாவது கருவியால் எடுக்கும்படியாக மலம் ஒட்டிக்கொள்ளுதல், மூத்திரப்பை நிறைந்திருந்தும் மூத்திரம் வருவதில்லை, வெய்யிலடி, டைபாய்டுசுரம், பயத்தினால் வரும் வியாதிகள், கைகால் விழுந்து போகுதல்.

66. பாஸ்பரஸ் (Phosphorous): வெளிச்சம், சந்தடி, வாசனை அல்லது தொட்டாலும் சகிக்கக்கூடாதவர்களுக்கும் ஒல்லியாக—சதைப்பிடிப்பே இல்லாமல்—உயர்ந்துகொண்டே போகுதல், இதனால் கூனல் விழுபவர்களுக்கும் ஏற்ற தொரு ஔடதம். இரத்தம் கக்கல், சிறிய காயத்திலிருந்தும் இரத்தம் அதிகம் வடிதல்,

நடுமுதுகில் எரிச்சல் அல்லது காங்கை யுண்டாகுதல், மலக்கட்டு, மலம் போனு லும் கயிறுபோல் நீண்டும், வரண்டு, முரப் பாகக் கஷ்டத்தோடு போகுதல், ஜவ்வரிசி கலந்திருப்பது போல் தண்ணீர் வடிவாகப் போகும் போக்கு, வாந்திபேதி சமயத்தில் அபானம்திறந்திருப்பதுபோல்தோன்றுதல், மார்பு இருகப்பிடித்து, சாயங்காலத்தில் வரும் சளியில்லாத இருமல், பாஸ்பரஸ் வியாதியஸ்தருக்கு தானிருக்கும் அறையில் புதிதாக ஒருவர் வந்தால் உடனே இருமு தல். இருமும்போது நெஞ்சுவலித்து தேக முழுவதும் நடுக்கலெடுத்தல். அடிக்கடி ஒன்றுக்குப் போகுதல்.

67. **பாஸ்பாரிக் ஆஸிட்** (Phosphoric Acid): சரீரத் தளர்ச்சியோடு சஞ்சல முகத்தோடு எதுவும் பிரியப்படாமல் நம்

பிக்கையற்றிருத்தல், பெருந்துக்கத்தினுல் வரும்கோளாறுகள், அதிக ஸ்திரீ சம்போகத்தினுல் வரும் கெடுதிகள், அடிக்கடி இந்திரியம் ஸ்கலிதமாகுதல, தாது நஷ்டம், வயிற்றுப் போக்கினுல் மற்ற உபாதைகள் சௌகர்யமாகுதல், எவ்வளவு தரம் வயிற்றுப் போக்குப் போனுலும் பலவீனம் ஏற்படுவதில்லை. இரவில் அடிக்கடி ஒன்றுக்குப்போகுதல், பால் போன்ற வெண்மையான மூத்திரம், மூளை சம்மந்தமான டைபாய்டு சுரம், அதிகச்சோம்பல், மயக்கம்.

68. பிளம்பம் (Plumbum): அதி சீக்கிரத்தில் அதிகமாக இளைத்துப் போகுதல், பாரிசவாயு, இரத்தமின்றி அதிகம் இளைத்துப் போகுதல், அடிவயிற்றில் அதிக நோய், அடிவயிறு நடுமுதுகு எலும்பில் கட்டியிருப்பது போல் தோன்றுதல், மலச்

சிக்கல், ஆட்டாம் புழுக்கை போலிருக்கும் மலம்.

69. பெட்ரோலியம் (Petroleum): வெடித்தும், இரத்தமும் நீரும் கசிந்து கொண்டிருக்கும் படைகள் குளிர்காலங்களில் அதிகமாகவும், வெயிற்காலங்களில் சமனமாகவுமிருக்கும். சிறிது காயம் பட்டாலும் சடுதியில் சீழ்பிடிக்கும். வயிற்றுப் போக்கிற்கு முன் வயிற்றில் வலி. பகல் வேளைகளில் மாத்திரம் வயிற்றுப் போக்கு, ஏதாவது ஆகாரம் உட்கொண்டால் சமனமாகும் வயிற்று வலி.

70. ப்ளாடினு (Platina): இது முக்கியமாக ஸ்திரீகளுக்கு உபயோகப்படும் ஒரு ஔஷதம். புணர்ச்சி அவயவங்கள் அதிக உணர்ச்சியுடன் இருத்தல், துணி பட்டாலும் பிடிக்காது. சம்போகத்தில்

வெறுப்பு அல்லது மிதமிஞ்சிய விருப்பு, தற்பெருமை, மற்றவர்களைக் கேவலமாகப் பேசுதல், ஒவ்வொன்றும் அற்பமாகத் தோன்றுதல், விசாரமும், தேவபக்தியும் மிகுதல், அதிக காமரோகம், மாதவிடாய் சீக்கிரமாகவும், அதிகமாகவும், வெகுநாள் படுகிறதுமல்லாமல் நாற்றத்துடன் கருப்பாகவருதல், பிரயாணஞ் செய்யும் போது மலம் கட்டல்.

71. ப்ளாண்டாகோ (Plantago): காது நோய், பல்வலிக்குச் சிறந்த மருந்து. உள்ளுக்கு 1x கொடுத்து நோயுள்ள பாகத்தின் மேல் திராவகத்தை தடவினால் நோய் குணமாகும். நோயுள்ள பாகத்திலுள்ள காதைப் பஞ்சால் அடைத்து வைக்கவும். பஞ்சிலும் இரண்டு துளி திராவகத்தை ஊற்றலாம்.

**72.** போடோபில்லம் (Podophylum): இம்மருந்து ஈரல் திமிர் அடைந்து, அதில் இரத்தம் அதிகம் கட்டுதலுக்கு உபயோகமாகும். பித்தத் தலை வலி, மஞ்சட்காமாலையோடு கல்லடைப்பு, முக்கியமாகக் காலையில் பச்சையாயும், புளிப்பாயும், தண்ணீர் போல் அதிகமாகப் போகும் பேதி, பல் முளைக்கும் காலத்தில் குழந்தைகள் ஈறுகளை நன்கு கடித்துக் கொண்டிருத்தல்.

73. பல்ஸடில்லா (Pulsatilla): இவ்வௌஷதத்தின் குறிகள் முக்கியமாக ஸ்திரீகளுக்கே அதிகமாக இருக்கும். ஈரத்தில் நடப்பதால் மாதவிடாய் நின்று போகுதல், பெரும்பாடு, வெட்டை சூடு, தலைவலி, பல் வலி, கண் எரிச்சல், கண் இரைப்பையில் கட்டிகள். சாந்த குணம், எளிதில் சிரிப்பும், அழுகையும் வருதல், கோபம் வந்தாலும்

அழுதல், வியாதிக் குறிகள் மாறுதல், இடம் விட்டு இடம் மாறும் நோய், தாகமின்மை, கனமான ஆகாரம் சாப்பிட்டால் அஜீர்ணம் ஏற்பட்டுப் பேதியாகுதல். காலையில் வாய் ருசி மாறுதல், நாக்கு மாவு படுதல், மாதவிடாய் கொஞ்சமாகவும், தாமதமாகவும், கெடுத் தவறியும், அதிக வலியுடன் வருதல். உஷ்ணமான அறையில் இருந்தால் உபாதைகள் அதிகரித்தல்; வெளியே வந்தாலும் குளிர்ச்சிபட்டாலும் சற்று சௌக்கியமாகுதல்.

**74. பைரோஜன் (Pyrogen):** பிரசவமாயும், ஆபரேஷன் செய்தும் அல்லது வேறு எக்காரணத்தினாலாவது இரத்தம் கெட்டு முகம் நீலமாகி வரும் ஜன்னியைச் சேர்ந்த வியாதிகளுக்கு இது சிறந்த மருந்து. டிப்தீரியா, டைபாய்டு அல்லது எந்த கெட்ட

வியாதிகளினுலாவது இரத்தத் தாரையில் விஷம் சென்று (Septic) வியாதிப்படுதல். உடம்பெல்லாம் அடித்தாற் போல் தோன்றும் உடம்பு வலி. கொஞ்சமாவது அமைதியில்லாதிருத்தல், உடம்பிலிருந்து வெளியேறும் எதுவும் பொறுக்க முடியாத நாற்றமெடுத்தல், மலக்கட்டி பெரிதாகவும், கருப்பாகவும், பிண நாற்றமாகவும் போகுதல், நாடி விரைவாகச் செல்லுதல், இவ்விதக் குறிகளுள்ள வியாதிகளை நன்கு கண்டிக்கும்.

75. **ரியம்** (Rheum): உடல் முழுவதும் நாற்றமெடுத்தல். குழந்தைக்கு ஸ்நானம் பண்ணினுலும் புளிப்பு நாற்றம் வீசுதல், வயிற்று வலியால் புளிப்பான வயிற்போக்கு முக்கியமாகப் பல் வளரும் போது இந்த மருந்து அதிக உபயோகம்.

76. ரோடோடெண்ரன் (Rhododend--ron): புயலுக்குப் பயந்தும், இடிக்குப் பயந்தும் இருக்கும்-தைரியமற்றவர்களுக்கு ஏற்ற மருந்து. வியாதியின் குறிகளெல்லாம் இடி மழை. காற்றுக்கு முன்னதாகவே அதிகரிக்கும். வாத ரோகம், கணு வாதம், பீஜம் கெட்டியாகுதல், பல் வலி. முதுகு நோய், நரம்பு நோய் முதலியவைகளுக்கு ஏற்ற மருந்து.

77. ரஸ்டாக்சீகோடண்ட்ரன் (Rhus Toxicodendron): வாயு சம்மந்தமானதும், சரீரத் தோலுக்கு அடுத்து ஏற்படும் வியாதிகளையும் இம்மருந்து கண்டிக்கும். ஓய்ந்து இளைப்பாற முடிகிறதில்லை. கவலை, படுக்கையில் ஒரே பக்கமாகப் படுக்க முடியாமல் சௌக்கியத்திற்காக இங்குமங்கும் மாற்றிக் கொண்டேயிருக்க வேண்டும்.

காலையில் எழுந்திருக்கும் போதாவது அல்லது இளைப்பாறி எழுந்திருக்கும் போதாவது கைகால் மறத்து நொண்டுதல். நடந்தால் கொஞ்சம் சௌக்கியமாகுதல். புயற் காற்றுக்கு முன்னும், மழைக்கு முன்னும் வியாதியதிகரித்தல். திரேகம் அதிகம் சூடாகிய பின் மழையில் நனைந்ததினால் வரும் கெடுதிகள். டைபாய்டு சுரம் ஆரம்பமாகும் போது பலத்தை ஒடுக்கித் தாழகப் போகும் பேதி. சரீரத்தின் மேலிருக்கும் நீர்க் கொப்புளங்கள், சீழுள்ள சிறு கொப்புளங்கள், சொறிகள், பருக்கள் இவைகள் எரிச்சலெடுத்து அதிக நமைச்சலெடுக்கும். வாத ரோகம், அடிமுதுகு நோய், சுளுக்கினால் எடுக்கும் வலி, அக்கி, கரப்பான், ஜலதோஷம், டைபாய்டு சுரம், குளிரில் வெளியே போனதால் வந்த பாரிசவாயு, விளையாட்டம்மை, அழுக்குத் தேமல்,

சொறி நிறைந்த தலை முதலியவைகளைப் பூராவாக குணமாக்கும்.

. **78. ஸீகேல் கர்நூட்டம்:** (Secale Cornutum): மெலிந்த சரீரம், தொள தொளத்த தசைகள் உள்ள ஸ்திரீகள். பிரசவத்திற்குப் பின் ஏற்படும் மனப் பிராந்தி. கருச் சிதைவு ஏற்படும் போன்ற நிலைமை, இது அனேகமாக 3வது மாதத்தில் ஏற்படலாம். பிரசவ காலத்தில் அமுக்கும் வலிகள், தாறுமாறான வலிகள், பலவீனமான வலிகள். வலிகள் திடீரென்று நின்று விடுதல். பிரசவத்திற்குப் பின் நீர் இறங்காமை.

**79. ஸெபியா** (Sepia): இது ஸ்திரீகளுக்கு முக்கியமாக அவர்கள் கர்ப்பஸ்திதியிலாவது, பிரசவித்த பிறகாவது அல்லது குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் போதாவது கொடுக்கச் சிறந்த மருந்து. கருப்பப்

பை நழுவுதல், அடிவயிற்றிலிருந்து எல்லா அவயவங்களும் வெளியே பிதுக்கிக் கொண்டு வருகிறாற்போல தோன்றி அதிக வலியெடுத்தல் அதனால் கால் மேல் கால் போட்டுக் கொண்டாவது இரண்டுகால்களை ஒன்றாக சேர்த்துக் கொண்டாவது இருக்கப் பிரியம்.

80. சிலிகா or சைலீஷியா (Silicea): ஆகாரத்தை ஜீரணிக்க சக்தியில்லாமலும், ஆகாரம் புஷ்டி கொடுக்காமலும் இருப்பவர்களுக்கு இது தக்க மருந்து. சரீரத்திலும் மனத்திலும் பலனற்று அதிக உணர்ச்சியுள்ளவர்களுக்கு இது நல்ல மருந்து. பெருத்த தலை, தொண்டை வியாதியுற்றும், தைத்தும், வயிறு பெரிதாகியும், பலனற்ற கணுக்கால்களும் சீக்கிரம் நடக்க முடியாத குழந்தைகட்கும் ஏற்றது. நரம்பு

கள் தடித்தும், விம்மியும் சீழ்பிடித்தல். சீழ்பிடித்த பின் இம்மருந்து சீக்கிரத்தில் சொஸ்தப் படுத்தும். வெகு நாள் சென்று முற்றிப்போய் அதிக தொந்திரவு செய்யும் தலைவலி. இது காற்றுப் பட்டாலும், தலையைத்திறந்து வைத்தாலும் அதிகரிக்கும். மாதவிடாய் வரும் முன்னேயும், படும் போதும் மலக்கட்டு. வெளிக்கு போவது மிகவும் சிரமம். பவுத்திர வியாதி அதாவது அபானத்தில் புண். இவைகளைக் குணப் படுத்தும்.

81. ஸ்பாஞ்ஜியா டோஸ்டா (Spongia Tosta): இவ்வௌஷதம் முக்கியமாக கணை, மாந்த சன்னி முதலியவைகளால் இரவில் அதிகம் இருமிக் கஷ்டப்படும் போது சிறந்த மருந்து. தொண்டை கம்மியும், இருமி இருமி மூச்சுத் திக்கு

முக்கு ஆகும்போது கொடுக்கலாம். தொண்டை வீங்கி பிறகு வரும் கட்டியையும் சொஸ்தப்படுத்தும்.

82. ஸ்பைஜீலியா (Spigelia): இருதய சம்மந்தமான உபாதைகளுக்கு இதுவும் ஓர் முக்கியமான ஔஷதம். நாடித் துடிப்பு மிகவும் உக்கிரமாகவும், மார்புக்கு வெகு சமீபத்திலேயே சப்தம் தெளிவாகக் கேட்கும், தலைவலி. சூரியன் உதயமாகும் போது ஆரம்பித்து நடுப்பகலில் அதிகமாகி மாலையில் நீங்கி விடுதல்.

83. சாங்க்கிநேரியா (Sanguinaria): சில நாட்களுக்கு ஒருமுறை வரும் தலைவலிக்கு இவ்வௌஷதம் மிகவும் பிரயோசனப்படும். இருமல், கோழை தளர்ந்திருத்தல். நியுமோனியா சுரத்திற்குப் பின் ஏற்படும் கடுமையான இருமல் அதாவது

வியாதியஸ்தரின் சுவாசமும், கோழையும் அதிக நாற்றமுடன் இருத்தல். வாத சம்பந்தமான வலிகள் வலது புஜத்திலும், தோள்களிலும் ஏற்படுதல். ஸ்திரீகளுக்கு மாதவிடாய் நிற்கும் காலங்களில் உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும் உஷ்ணமான உணர்ச்சியேற்படுதல்.

84. சல்பர் (Sulphur): இந்த மருந்து சளியுண்டாக்கும் ஜவ்வுகளைத் தொடாமல் சரீரத் தோல் மேலிருக்கும் எப்படிப்பட்ட வியாதியையும் குணமாக்கிவிடும். இதன் முக்கிய குறிகளாவன:-சரீரத்தின் மேல் நமைச்சலெடுக்கும் புண். சொறிந்தால் மட்டாகும். சூடான படுக்கையில் படுத்தால் அதிகரிக்கும். சரீரத்தின் மேல் வரும் சொறிகள். சில வேளை அவை நீர் கோர்த்திருக்கும் கட்டிகளையும் குணமாக்கலாம்.

ஆரம்பத்தில் பழுக்க விடாமலும், வளர விடாமலும் தடுக்கலாம். குளிர் காலத்தில் குழந்தைகளுக்குண்டாகும் சிரங்குகள், விரல் சுற்றி, தலைச் சொறி, கண்ட மாலை, சரீரம் நிறையக் கட்டிகள், கண், மூத்திரத் தாரை, ஆசனவாய் முதலியவைகளில் உண்டாகும் வியாதிகள், மூத்திரம் அடக்க முடியாமல் ஒழுகுதல், வெகு நாள் சென்ற மேக வெட்டை, கருப்பை நழுவுதல், வயிற்றில் றில் நாடா போன்ற பூச்சிகள், மூலம், வெகு நாள் சென்ற மலக்கட்டு, தலையில் உஷ்ணம் இரவில் உள்ளங்கையும், அடிப்பாதமும் எரிச்சலெடுத்தல், அதனால் குளிர்ச்சியான விடத்தைத் தேடுதல். இரவில் தூங்கும் போது திக்குமுக்காடி, கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்து வைத்தல், நடு இராத்திரியிலாவது அதிகாலையிலாவது பேதியாகுதல். சரியான குணத்தைக் கண்ட

றிந்து தகுந்த மருந்தைக் கொடுத்தும் பயன் படாமற் போனால் இம்மருந்தைக் கொடுக்க லாம். இது கிழவர்களைப் போல் ஒடுங்கலும், கூன் வளைந்து நிற்க முடியாமலும் நடந் தால் அல்லது உட்கார்ந்தால் வியாதி மட் டாகும் மனிதர்களுக்கு ஏற்றது. இம்மருந் துக்குத் தகுந்த வியாதியஸ்தர் எப்போதும் அழுக்காகவே இருப்பார்கள். பிள்ளைகளா யிருந்தாலுஞ்சரி, பெரியவர்களாயினும் சரி, ஸ்நானம் செய்யப் பிரியப்படமாட்டார்கள். அப்படிக் கட்டாயம் செய்து ஸ்நானம் செய் வித்தால் அவர்கள் வியாதி அதிகரித்து விடும். அடிக்கடி உபயோகப்படக்கூடிய ஔஷதங்களில் இதுவொன்று.

85. ஸ்ட்ரமோனியம் (Stramonium): அதிகம் சிரித்துப் பேசி, பாடி, கூத்தாடுதல், இறந்தவர்களைக் காணுதல், காதில் பல பேச்

சுக்கள் கேட்டல், மிதமிஞ்சிய தெய்வ பக்தி அடிக்கடி சத்தியம் செய்தல், வெளிச்சமும் கூடத் துணையும் வேண்டுமென்று பேராவல் கொள்ளுதல். புத்தி மாறி வீட்டிலிருந்து வெளியே ஓடப் பிரியப்படுதல், தலையணை மேல் படுத்திருக்கும் பொழுது அடிக்கடித் தலையை உயர்த்திப் பார்த்தல். காலையில் நெற்றியின் பேரிலும், கண் புருவத்தின் பேரிலும் நோய், வெறித்துப் பார்க்கும் கண்கள். கண்கள் விரிந்து பார்வை மங்கலாகுதல், சிறு பொருள்கள் பெரிதாகத் தோணுதல். சளியும், பித்தமுமாக வாந்தியெடுத்துத் திக்கிப் பேசுதல். மூத்திர அடைப்பு. தூக்கத்தில் குறட்டை விடுதல், தூக்கத்தில் அலறுதல். கைகால் நடுக்குதல். இடது புட்டத்தில் அதிக நோய் எடுத்தல்.

86. துஜா (Thuja): சரீரத்தின் மேலிருக்கும் அத்திப் பழம் போன்ற பல தினுசான மருவுகளுக்கு ஏற்ற மருந்து. மேக வெட்டையை வெளிக்கு வராமல் தடுத்துவிடுவதினாலும், சரியற்ற அம்மை குத்திக்கொள்ளுவதினாலும் உண்டாகும் கெடுதிகளுக்கு இது பிரயோஜனகரமானது.

87. வெனேடியம் (Vanadium): இந்த மருந்து தேகத்தில் பிராணவாயுவைச் செலுத்தி, இரத்தத்தை விருத்தியாக்கி கெட்ட வியாதிகளின் கிருமிகளை அப்படியே நாசப்படுத்திவிடும் ஆனபடியால் தேகத்தை பலஹீனப் படுத்தும் வியாதிகளாகிய பாண்டு ரோகம் (இரத்தமின்மை), மூத்திரத்தில் இந்திரியக் கலப்பு, காரணம் தெரியாமல் மெலிந்து போகுதல். க்ஷய ரோகம் இன்னும் மற்ற இரத்தத்தைச்

சார்ந்த வியாதிகளை முற்றும் சுகமாக்கி விடும். இந்த மருந்தை 6x வீரியத்தில் தான் ஒரு நாளைக்கு ஒரு தடவை சாப்பிட வேண்டும்.

88. வாரியோலினம் (Variolinum): பெரியம்மை வராது தடுப்பதற்கும் அப்படியே ஒரு வேளை வந்தாலும் அதன் அபாயத்திலிருந்து தப்புவதற்கும் இம் மருந்து அதிகம் பயன்படும். சுற்றுப் பக்கங்களில் வைசூரி பரவியிருக்கும் காலங் களில் இதை 6 வீரியத்தில் தினம் ஒரு வேளை சாப்பிட்டு வந்தால் வியாதி அணுகாது.

89. வெராட்ரம் ஆல்பம் (Veratrum Album): இலையுதிர் காலத்தில் வயிறு முறுக்கி உண்டாகும் பேதி. சில வேளை யில் வாந்தியும் காணும். கொடூர வாந்தி

பேதி, திடீரென்று திரேகம் பலனற்று படுக்கையாய் விடுகிறது. நெற்றியில் சில்லென்று வியர்த்தல், முகம் வெளுத்து, கண்கள் குழிகளில் இறங்கி மூக்கு எறெடுத்து மூக்குமுனை, கைகால்கள், மற்ற அயவங்களும் சில்லென்று குளிர்ந்து போகுதல், வாந்தி பேதியானல் வயிற்று வலி கண்டு, கைகால் மறத்து, சில்லென்று வியர்த்து அரிசி கழுநீர் போல தண்ணீர் தண்ணீராக பேதியாகி, குமட்டலும், வாந்தியும் மும்மரமாகக் கண்டு பலம் முற்றுமே யில்லாமல் படுக்கையில் கிடக்கும் சமயங்களில் இது அதிசிறந்த மருந்தாகும். இம்மாதிரி குறிகள் அதிகம் காலரா கேஸில் இருக்கும். இவ்வௌஷதம் கக்குவாயில் காணும் இசுவையும், கர்ப்ப ஸ்திரீகளுக்குண்டாகும் வாந்தியையும் கண்டிக்கும்.

90. வெராட்ரம் விரைட் (Veratrum Viride): காய்ச்சல், தலை வலி, அனத்தல், நாடி விரைவாய்ச் சென்று குமட்டல், குழந்தைகளுக்கு வரும் இறங்கியேறும் சுரம், முகம் சிவந்து வரும் சுரம், சின்னம்மை, குழந்தைகளுக்கு பல் வளரும் போது தலைக்கு அதிகமாக இரத்தம் செல்லுதல், நியுமோனியா சுரம், நீர்கோத்துள்ள கரப்பானுக்கு இம்மருந்தின் தாய் திராவகத்தை அரை அவுன்ஸ் தண்ணீரில் 30 துளி விட்டு மேலே பூசினல் சுகமாகும். சிறிய சப்பாத்து போடுவதினுலுண்டாகும் கால் விரல்களில் புண், கட்டிகள் முதலியவைகள் மேல் பூசினுலும் சுகமாகும்.

91. சிங்க்கம் மெடாலிகம் (Zincum Metallicum): இது மூளை, நரம்புத் தாரைகளின் வியாதிகளில் உபத்திரவப்பட்டு,

பலத்தையிழந்து போனவர்கட்கு ஏற்ற மருந்து. கால்கள் ஒருவிடத்தில் நிலைக்காமல் துருதுருவென்று இங்குமங்கும் நடக்கச் செய்யும் குணம், முதுகு முழுவதும் எரிச்சல், உட்கார்ந்தால் அதிகரித்து, நடந்தால் சுகமாயிருக்கச் செய்யும் குணத்தையும் சொஸ்தமாக்கும்.

அத்தியாயம் 4.

# தினசரி உபயோகமாகும் சில வெளிப்பூச்சுத் தாய் திராவகங்கள்.

# (EXTERNAL MOTHER TINCTURES)

1. ஆர்னிகா (Arnica): தோல் உரியாமல், நசுக்கல் அல்லது நொறுக்குதலால் உண்டாகிய காயங்கள், சுளுக்கு முதலியவைகள், நடையினால் காலில் கொப்புளம், குதிரை சவாரியினாலும், அதிக நாள் வியாதியாய் படுத்திருந்ததினால் உண்டாகும் புண்கள், நமைச்சலெடுக்கும் பனி வெடிப்பு, சப்பாத்து போடுவதினால் உண்டாகும் பாதக்காய்ப்பு இவைகள் மேல் பூசினால் அல்லது சிறு கந்தையில் நனைத்து மேல் வைத்தாலும் சுகமாகும்.

2. பெல்லடொன்ன (Belladonna): தொண்டைக் கம்மல், சளியில்லாத இருமல், கழுத்து நரம்புகள் அல்லது தொண்டை வீக்கம், புட்டாளம்மை, அடி வயிற்று வலி இவைகள் உள்ள இடத்தின் மேல் பூசினல் குணம் காணும்.

3. பிரையோனியா (Bryonia): கழுத் துப் பிடிப்பு, வாயு, முதுகு வலி, முட்டி கள் பிடித்து நோகுதல் இவைகளுக்கு தேங் காயெண்ணேயுடன் கலந்து தேய்த்தால் சுகமாகும்.

4. காலண்டுலா (Calendula): இத் திராவகம் எங்கே படுகிறதோ அங்கே சீழ் இருக்கவே இருக்காது. சிரங்கு, கட்டிகள் காயங்களுக்குச் சிறந்த மருந்து. ஆபரே ஷன் செய்த காயங்களுக்குச் சிறந்தது.

5. யூபரேஷியா (Euphrasia): அதிகாலையில் கண்களில் அழுக்கு வடிந்து கண்கள் மூடிக்கொள்ளும் போது ஒரு பெரிய கரண்டி வெந்நீரில் இவ்வௌஷதத்தில் 5 துளி விட்டு கலந்து கழுவினால் சுகமாகும்.

6. பெர்ரம் மூரியாடிகம் (Ferrum Muriaticum): அதிகக்காயப்பட்டு இரத்தம் வெள்ளமாய் வடிகிறவிடத்தில் இந்த மருந்தில் சில துளிகள் விட்டால் இரத்தம் உடனே கட்டிப்போகும்.

7. ஹமாமெலிஸ் (Hamamelis): மூலரோகங்கள், வாயுவினால் கனுக்கள், மூட்டுக்கள் நோகுதல், நரம்பு வீக்கம், மூக்கு, ஆசனம் இவைகளிலிருந்து இரத்தம் வடிதல் இவ்வுபாதைகளுக்கு 10 பாகம் வெந்நீரில் ஒரு பாகம் மருந்து கலந்து பூசினால் குணப்படும்.

8. ஹைபரிகம் (Hypericum): இது வும் அடி, வெட்டு, குத்துப்பட்டு சதை கிழிந்த காயங்களுக்கு கைகண்ட மருந்து. ஆர்னிகாவைப் போலவே இதையும் உப யோகிக்கவும். உள்ளுக்கு ஹைபரிகம் 3x கொடுக்கலாம்.

9. லேடம் பால் (Ledum Pal): மூட்டு கள் பிடிப்பினால் வலியெடுத்தல், நாய், பூனை கடிகள், குளவி, பூச்சி கொட்டுகள் இவைகளுக்கு வெந்நீரில் கலந்து பூசலாம்.

10. ரஸ் டாக்ஸ் (Rhus Tox): அடி முதுகு, கணுக்கள் வலித்தல், மணிகட்டு, சதை நரம்பு சுளுக்குதல், காயங்கள் இவை களுக்கு உபயோகப்படும்.

11. துஜா (Thuja): மருவு, பா லுண்ணி இவைகள் மேல் தடவி வந்தால் அவைகள் மறையும்.

12. **ஐயோடியம்** (Iodium): தொண்டை, நெஞ்சு, இருதயம், ஈரல், பீஜம், கால் முதலியவைகள் வீக்கத்திற்கு மேலே மூன்று நாளைக்கு ஒரு தடவை வீதம் பூசி வந்தால் குணமேற்படும்.

## அத்தியாயம் 5.

# குடும்ப வைத்திய சிகிச்சை

குடும்பங்களில் சாதாரணமாக ஏற்படும் வியாதிகளில் சிலவற்றிற்கு அடியில் மருந்துகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. வியாதியின் குறிக்குப் பின்னல் மருந்தின் பெயர் சுருக்கமாக குறிக்கப்பட்டிருக்கின்றது.

1. a. அம்மை, பெரியம்மை: *சுற்று வட்டாரங்களில் பரவியிருக்கும் பொழுது தடுப்பதற்கு* (வாரியோலினம் 6) *குமட்டலெடுத்து திரேகம் மிகவும் பலவீனமாகுதல்.* (ஆண்டி டார்ட் 3x)

b. சின்னம்மை, விளையாட்டம்மை: *ஆரம்பத்தில் கொடூர காய்ச்சல் கண்டு, அமைதியில்லாமலிருத்தல்* (அகோனைட் 3x)

புத்திமாறி பிதற்றல் (பேல்லடோன்ஞ 6x) முத்துக்கள் உண்டான போது (ஆண்டிடார்ட் 6x) பெரிய முத்துக்களில் சீழ் பிடித்தல் (பல்ஸடி 6x).

c. தட்டம்மை: ஆரம்பத்தில் காய்ச்சல்கண்டு, தாகமெடுத்து, கவலையோடு, அமைதியில்லாமலிருப்பது (அகோனைட் 3x) முகம் சிவந்து கொதித்து, தொண்டை புண்ணுகி, தலைவலி, சளியில்லாத இருமலோடு காய்ச்சல் வருதல் (பேல்லடோன்ஞ 6x), ஜலதோஷத்தோடு பேதி (பல்ஸ் 6x) உடம்பெல்லாம் நொந்து, முட்டிகள், கணுக்கள் வலித்தல், உடம்பை இங்கு மங்கும் அசைத்துக் கொண்டேயிருத்தல் (ரஸ்டாக்ஸ் 6x).

d. பட்டாளம்மை: ஆரம்பத்தில் காய்ச்சல் கண்டு தாகமெடுத்து, பெருத்த கவலை

கொண்டு இங்குமங்கும் அசைந்து கொண்டேயிருத்தல் (அகோனைட் 3x), தாடை சிவந்து, வீங்கி, மின்னி நோகுதல் (பெல்லடோன்னு 3x) வீக்கம் வெளித்திருந்தால் (மெர்கூரி சோலு 6x), அண்டம் வீங்கியிருத்தல் (பல்ஸ் 3x)

2. **அஜீர்ணம்:** *ஜீரணிக்காத ஆகாரம்,* (நக்ஸ்வாமிகா 6x) *வயிற்றில் வாயு, புளியேப்பம்* (கார்போவெஜி 6x) *வயிற்றில் கல்லிருப்பது போல் காணுதல், பித்த வாந்தி, மாவுடைந்த நாக்கு, மலக்கட்டு* (பிரையோ 3x) *நாக்கு பால் போன்ற வெள்ளை, குமட்டல், பலவீனம்* (ஆண்டிடார்ட் 6x) *கொழுப்பான ஆகாரத்தினுல் வந்தால்* (பல்ஸ. 6x) *நெஞ்செரிச்சல், மலம் நாற்றமெடுத்து வெள்ளையாகப் போகுதல்* (கல்கே. கார்ப் 6x) *வியாதி சாப்பிடும் போது*

நின்று கொஞ்ச நேரஞ் சென்றபின் வருதல் (அனகார்டி 3), அடிவயிற்றில் அதிக வாயு மலக்கட்டு (லைக்கோ 30).

3. அடிமுதுகு நோய்: கத்தியால் குத்தினாற்போல் நோகுதல் எழுந்திருக்கும் போது கால் பிடித்துக்கொண்டு, புண்ணுக நோகுதல் (ரஸ்டாக்ஸ் 6x) காயத்தினுல் நோய் (ஆர்னிகா 6x) வெகு நாள் சென்ற நோய் (சல்பர் 30).

4. இருமல்: வரண்டு, தொண்டை குத்தி, கொஞ்சம் இருமுதல் (அகோனைட் 3x), நெஞ்சு வலித்து, நடந்தால் அதிகரித்தல் (பிரையோ 6x), இரைப்பினுல் வரும் இருமல், இரவில் அதிகரித்தல் (ஆர்ச. ஆல் 6x), முகம் சிவந்து, திரேகம் உஷ்ணமாகி சளியில்லாமல் பொறுத்துப் பொறுத்து இருமல் (பேல்லடோன்னு 3) மெத்த சளி

யோடு இருமல் (ஆண்டி டார்ட் 6x) திக்கு முக்காகிறாற் போல் இருமல் (ஹீபார் ஸல் 6x) தொண்டை கம்மி இருமல் (ஸ்பாஞ்சியா 6x) தொண்டை கம்மி புண்ணாகத் தோன்றி, நெஞ்சுவலித்தல் (பாஸ் 6) சளியில்லாமல் இருமும்போது ஒன்றுக்குப் போகுதல் (காஸ்டி 6) அதிக பலவீனப் படுத்தும் சளியில்லாத இருமல் (நக்ஸ் வாமிகா 6x) படுத்திருக்கும்போது நிற்காமல் இருமி இருமி இழுத்துக் கொண்டு போகுதல் (ஹயாஸ்யாமஸ் 3) தொண்டை கம்மி புண்ணாகி தலையை அசைத்து அசைத்து இருமல் (மெர்கூ. சாலு 6x) குமட்டலெடுத்து ஒரே நெட்டாக இருமல் (இபிகாக் 3x) சளியோடு அல்லது சளியில்லாமல் அடுத்து அடுத்து வரும் இருமல் (சல்பர் 30)

5. இடுப்பு வலி: இரவில் படுக்கும் போதும், இளைப்பாறும் போதும் நோய் அதிகரித்தல். நடந்தால் சுகம் (ரஸ்டாக்ஸ் 6x), மத்தியானத்தில் வலது பக்கத்தில் வலி யெடுத்தல் (லைக்கோ 30). மாலையில் அல்லது பொழுதுபோகும் போது தாகமில்லாலாமல், இழுக்கிறாற்போல் தோன்றும் நோய் (பல்ஸ. 6x)

6. இறைப்பு அல்லது சுவாச காசம்: இங்குமங்கும் அசைதல், கவலை, பயம், துரித நாடி (அகோனைட் 3), அடுத்தடுத்து இருமி இழுத்து, அப்புறம் வாந்தியெடுத்தல் (குப்ரம் 6). அஜீர்ணத்தால் அதிகாலையில் வியாதி வருதல் (நக்ஸ் வாமிகா 6x). நடு ராத்திரியில் கண்டு படுக்க முடியாதிருத்தல் (ஆர்ஸனிக். 30). காலை 3 மணியிலிருந்து 5 மணி வரை

காணுதல் (காலி கார்ப் 30). நெஞ்சில் சளியோடும், ஜலதோஷத்தோடும் காணுதல் (இபிகாக் 6x). குமட்டலும், இருதய பலவீனமும் (லோபிலியா இன். 3). பருத்த மனிதராக இருந்தால் (பிளாட்டா ஓரி 2x).

7. இரத்தம் வடிதல்: மெத்தக் கவலை, பயத்தினால் (அகோனைட் 3.) அடிபட்டதினால் (ஆர்னிகா 6x). குமட்டலெடுத்து சிகப்பு இரத்தம் அதிகம் கக்குதல் (இபிகாக் 3), ஒடுங்கலானவர்கள் கட்டி கட்டியாக இரத்தம் கக்கினால் (பேர்ரம் மேட்டாலிகம் 6), நரம்புத் தாரைகளிலிருந்து இரத்தம் வடிந்தால் (ஹமா. 1x), இரத்தம் வடிந்ததால் உண்டான பலவீனம் (சைனா3)

**8. இரத்தங்கெட்டு விஷமாகுதல்:** காய்ச்சல் கண்டு புத்தி தடுமாறல் (பாப்டீஷியா 1x), இரத்தம் அழுகி, நாற்றமெடுத்து சீழ் பிடிக்கும் தருணத்திலிருப்பது (பைரோ. 6), விஷமுள்ள காயங்களால் இரத்தம் கெடுதல் (லாச்சஸிஸ் 30).

**9. இசுவு, ஜன்னி:** முகம் ஊதுதல் (பெல் 6), முகம் வெளுத்து வருதல் (ஸிங்க்கம் 6x), குழந்தைகளுக்கு பல் வளரும் போது (சாமோ 3), நாக்குப் பூச்சியால் காணுவது (சைன 3x).

**10. ஈர்க்கட்டு:** அதிக உஷ்ணமாகி, சிவந்து, வீங்கி நோகுதல் (பெல். 6x), அதிகநோய் (மெர்கூ. சாலு 6x), சீழ்பிடிக்கும் சமயத்தில் (ஹீபார் 6x), சீழ் பிடித்த பின் (சிலிகா 6x).

11. **ஈரல் நோய்:** *பித்த வாந்தியெடுத்தல்,* (போடோ பில்லம் 6x), *சாராயம் அல்லது அதிக ஸ்திரீ சம்போகத்தினுல் உண்டாகும் கெடுதிகள்* (நக்ஸ்வாமிகா 6x). *வெகுநாள் சென்ற வியாதி மலக்கட்டு, வாயு, மூத்திரக் கலப்பு* (லைகோ 30) *வலது தோளுக்குக் கீழ் வலித்தல்* (செலி 3x), *மஞ்சள் நாக்கு, ஈரல் பக்கத்தில் தொட்டால், புண்ணுக இருத்தல்* (மேர் சாலு 6x).

12. **கர்ப்பங் கலங்கல்:** *பயந்து அக்ஷணமே அல்லது பின்னுலாவது உண்டாகுதல்* (அகோனைட் 3), *மூன்ருவது மாதத்தில் நேரிட்டால்* (சிமிசி 3x), *ஐந்தாவது அல்லது ஏழாவது மாதங்களில் ஏற்பட்டால்* (சேபியா 30), *தற்செயலாக ஆபத்தினுல் நேரிட்டால்* (ஆர்னிகா 6x) *மாமூலாகவும்,*

சுலபமாகவும் நேரிடும் போது (வைபூர்ணம் 3).

**13. கட்டிகள், பருவுகள்:** *சிவந்து வீங்கி நொந்தால் முதலில்* (பெல் 6x) *கொடுத்து பிறகு* (மெர்கூ. சாலு 6x *கொடுக்கவும். சீழ் பிடிக்கும் போது* (ஹீபார் ஸல்பர் 6x), *கட்டிகள் அனேகமாக வந்தால் முதலில்* (ஆர்னிகா 6x) *கொடுத்து பிறகு* (சல்பர் 30) *கொடுக்கவும். சீழ் பிடிக்கும் போது* (மெர். சாலு 6x) *சீழ் பிடித்து வெகு நாள் சென்ற பின்* (சிலிகா 6x), *வீங்கி, எரிந்து, தேள் கொட்டுவது போல் தோன்றும் நோய்க்கு* (அபிஸ் 6x).

**14. கண் நோய்:** *குளிர்ச்சியால் அல்லது அடியால் கண் சிவந்தால்* (அகோனைட் 3x), *மேல் பட்ட காயத்தினால் நோய்* (ஆர்னிகா 6x), *கண் வீங்கி, சிவந்து, கூசி, பக்*

கத்துத் தலைவலியுண்டாகுதல் (பெல்லடோன்ன 6x), இதில் சுகமில்லாமற் போனால் (கல்கே. கார்ப் 6x), கண் சிவந்து அதிகம் நீர் வடிதல் (மெர். கரோ 6x), கண்களில் அதிகம் நீர் வடிதல் (ஸ்பைஜீலியா 3) உவர்ப்பான கண்ணீர் வடிதல் (யூபரேஷியா 3x) பொங்கிப் போன கண் இரப்பைகள் (கிராபைடிஸ் 6) அல்லது (ஹீபார் 6x) கண்கள் சிவந்து இரைப்பைகளும் வீங்கியிருத்தல் (அபீஸ்மெல் 6x) கண்கள் சீழ் பிடித்து ஒட்டிக் கொண்டு கண் கட்டிகள் உண்டாகுதல் (பல்ஸ்டி 6x)

15. கரப்பான்: இரணம், வீங்கி, சிவந்து, மழமழவென்றிருத்தல் (பேல் 6x), அதிகம் வீங்கியிருந்தால் (அபீஸ் 6x), வீங்கி பளபளப்பாக சிவந்து, ஒரு இடத்தில் தங்காமல் இங்குமங்கும் உலாவுதல்

(ரஸ்டாக்ஸ் 6x) சிலுத்து, எரிந்து, பிசு பிசுப்பான நீர் வடிந்து நோகுதல் (கிராபை 30), தொட்டவுடன் சிலுத்து நோகுதல் (ஹீபார் 6x).

16. கக்குவாய்: இருமி, இருமி இழுத்தல் (இபிகாக் 3x), நெஞ்சில் சளியிருந்து கொர் கொர் என்று சப்தித்து இருமுதல் (ஆண்டிடார்ட் 3x), பொருத்துப் பொருத்து இருமி, சளியில்லாமல் தொண்டை குத்தி இருமல் (ட்ரோசரா 6x) இசுவு ஜன்னி கண்டு, கைகால் மறத்துப் போகுதல் (குப்ரம் 6x).

17. காது நோய்: குளிர்ச்சியில் வெளியேபோனதால் காதுநோய் (அகோனைட் 3) தாடைகளில் குத்திக் கிழிப்பது போன்றிருக்கும் நோய் (பல்ஸ 6x), தொட்டவுடன் சிலுத்தல், கோபித்தல் (சாமோ 3), நரம்புத்

தாரை வீங்கி நோகுதல் (மெர்கூ. சாலு 6x), முல்லன் எண்ணெ ஒரு நாளைக்கு மூன்று தடவை இரண்டொரு துளி விட்டு வந்தால் காது நோய் சுகமாகும்.

18. **காதில் சீழ் வடிதல்:** காதுக்குப் பின்னால் நரம்புகள் வீங்கி, இரத்தம் நாற்ற மெடுத்து ஒழுகுதல் (மெர்கூ. சாலு 6x), காது செவிடாகி சீழ் வடிதல் (பல்ஸ 6x) வியாதியஸ்தனுக்கு இரசம் கலந்த மருந்து கொடுத்ததினால் சீழ் வடிதல் (ஹீபார் 3x) சாந்த குணமுள்ளவர்களுக்கு காதில் சீழ் கண்டு மிகவும் உபத்திரவப்படும் போது (ஆர்ஸனி 6x).

19. **காயங்கள்:** மேல் தோல் தேய்ந்தால் (ஆர்னிகா 6x), ஒரு பாகம் ஆர்னிகா திராவகத்தில் இரண்டு பாகம் தண்ணீரில் கலந்து லோஷனாக்கி, ஒரு கந்தைத் துணி

யில் நனைத்துக் காயத்தின் மேல் ஒற்றிக் கொண்டே வந்தால் சீக்கிரம் குணமாகும். எலும்புகள் தேய்ந்து போனால் (ரூடா 6x).

20. காய்ச்சல்: சாதாரணமானது. ஆரம்பத்தில் அதிக கவலை கொண்டு, கங்கையாயும், அமைதியில்லாமலுமிருத்தல், (அகோனைட் 3x), அதிகமாகக் காய்ந்து முகம் சிவந்து பிதற்றுதல் (பேல். 3x) மூச்சுப் பேச்சில்லாமல் இருத்தல் (ஜெல்சீமியம் 6), சாதாரணக் காய்ச்சல், பித்த வாந்தி, அஜீர்ணம் (பாப்டீ 1x), சரீரம் வியர்க்காமல். வரண்டு, நெருப்பாகக் காய்ந்தால் (ஸல்பர் 30x).

21. டைபாய்ட் அல்லது எண்ட்ரிக் என்னும் குடற் காய்ச்சல்: உடம்பெல்லாம் குத்தி அடிக்கிறாப் போல் நொந்து, காய்ச்சல் மட்டாக அடித்தல், நாக்கு மாவடைந்து,

நடந்தால் அதிகரித்தல் (ப்ரையோ 6x), உடம்பு வலித்து மூட்டுகள், கணுக்கள் நொந்து காய்ச்சல் மட்டாக அடித்து, நடந்தால் கொஞ்சம் சமனப்படுதல் (ரஸ்டாக்ஸ் 6x). முகம் சிவந்து கண்கள் பிரகாசித்து, பிதற்றல் உண்டாகுதல் (பேல் 6x). பாப்டீஷியா 1x ஆரம்பத்திலேயே கொடுத்தால் அனேகமாக சுகமடையும்.

22. குடல் நோய்: வெட்டுவது போல் வலிக்கும் குடல் நோய். அழுத்தினால் அல்லது சுருண்டு படுத்துக் கொண்டால் சுகமாகத் தோன்றுதல், முக்கியமாக ஆகாரத்தினால் வருவது (காலோசி 3), சுருண்டு படுத்துக் கொண்டால் அதிகரித்து, நேராக நின்றால் சுகம் தோன்றுவது (டயஸ் 3x) வாயுவினால் உண்டாகி, இரவில் அதிகரித்து காங்கை பட்டால் சுகமாய்த் தோன்றுதல்

(சாமோ 6x), அஜீரணத்தால் வந்தால் (நக்ஸ்வாமிகா 6x), அல்லது (பல்ஸ 6x) வயிற்றுல் போகாவிட்டால் (ப்ளம்பம் 6x), இரைப்பையில் பொறுக்க முடியாத நோய், சாகிறுற்போல் தோன்றுதல் (ஐரிஸ். டேக். 6) இரைப்பை முனையில் நோய், காய்ச்சல் தலைநோய் (பேல் 3x) அடி வயிற்றின் வலது பக்கத்தில், அறுக்கிறுற்போலும், கிழிக்கிறுற் போலும் தோன்றும் வலி, தொட்டால் அதிகவலி, தூங்கி எழுந்தபின் அதிகரித்தல் (லாச்ச 30).

23. குமட்டல் வாந்தி: அடிக்கடி குமட்டலெடுத்து ஆகாரத்தையாவது சளியையாவது வாந்தியெடுத்தல் (இபிகாக் 3), நாக்கில் மாவு படிந்திருந்தால் (ஆண்டிடார்ட் 3) பாலை வாந்தியெடுத்தால் (ஏதுசா 3)

புளிப்பு அல்லது பித்த வாந்தி (ஐரிஸ் வர்ஸி 6)

**24. சீதபேதி:** பேதியானபின் வயிற்றுக்கடுப்பு நின்றல் (நகஸ்வாமி 6x), பேதியாகும்போதும் அதற்கு முன்னும் வயிற்றுக் கடுப்பு (மெர்கரோ 6x) பேதியானபின் அதிகம் கடுத்தால் (நைட். ஆஸிட் 6x), குமட்டலெடுத்து கடுத்து, வெள்ளை சீதம் போகுதல் (இபிகாக் 3x) வயிற்று வலி அதிகமாகி, சுருண்டு படுத்துக் கொண்டால் சுகமாகத் தோன்றுதல் (காலோசி 3x), அதிக பலவீனமாகி தாகமெடுத்து பேதியாகுதல் (ஆர்ஸனி 6x) அடிக்கடி வயிறு கடுத்துப் போகுதல் (காந்தா 3x), காப்ஸிகம், குர்ச்சி கொடுத்தாலும் நல்லது.

**25. சூரிய அடி:** முகம் சிவந்து, மண் வெடிக்கும் போல் நோகும் தலைவலி, மூச்

சுப் பேச்சில்லாமல் இருப்பது (க்ளோறு யின் 6) சூரிய அடியால் படும் உபத்திர வத்திற்கு (1) லாச்சஸில் 30 (2) நேட்ரம் கார்ப் 30.

26. தலைவலி: தலைகொதித்து வெளிச் சத்தினுலும் சப்தத்தினுலும் நடப் பதினுலும் அதிகரித்து தலை படபட வென்று அடிக்கும் தலைவலி (பேல் 6x,) அஜீரணத்தால் வரும் தலைவலி (நக்ஸ் வாமிகா 6x) குளிர்ந்த ஜலத்தில் குளித்த தினுலும், ஜலதோஷம் பிடித்து வரும் தலைவலி (அகோனேட் 3) கொஞ்சம் அசைத் தால் மண்டை வெடித்து விடும்போல் தோன்றும் தலைவலி (பிரையோ 6x) தலை வலி மட்டாகக்கண்டு கண்கள் வட்டமிடுதல் (ஜெல்ஸி 6x) முகம் சிவந்து இரு பக்கத் திலும் படபடவென்று அடித்து சூரிய

வெப்பம் அல்லது சூரிய அடியால் வரும் தலைவலி (க்ளோனுயின் 6), குமட்டலோடு வரும் தலைவலி (இபிகாக் 3x) கண்கள் மங்கி, குமட்டிக் குமட்டிப் புளிப்பாக வாந்தி யெடுத்து தலைவலித்தல் (ஐரிஸ் வேர் 6) கபாலம் கொதிப்பெடுப்பதும், எரிச்சல் எடுத்தும், இரவில் படுக்கைக்குப் போகும் போது அதிகரித்து அல்லது வாரத்திற்கு ஒரு தடவை தவறாமல் வரும் தலைவலி (சல்பர் 30) பின்னந்தலையில் வலி கண்டு மேல் நோக்கிச் சென்று, வலது கண்ணில் வந்து நிற்கும் ஒற்றைத் தலைவலி (ஸாங்குனேரியா 3) வண்டியிலாவது, கப்பல், படகிலாவது செல்வதால் வரும் தலைவலி (கோக்குலஸ் 3), ஸ்திரீகளின் கர்ப்பப்பையைச் சார்ந்த வியாதிகளால் உண்டாகும் ஒற்றைத் தலைவலி (சேபியா 30).

27. தூக்கமின்மை: கெட்ட சமாச்சாரத்தைக் கேட்டு திடுக்கிட்டுத் தூக்கம் வராமை (ஒபி 3), நேரஞ் சென்று சாப்பிடுவதனுலும், அதிகம் சாப்பிடுவதினுலும் வருவது (பல்ஸ 3x), சாயங்காலத்தில் தூங்கி நடு இரவுக்குப் பின் விழித்துக் கொள்ளல் (நக்ஸ்வாமி 6x), பேசுவதெல்லாம் கேட்கக் கூடும்படியான கொஞ்சம் தூக்கம், அதிலும் முழுவதும் கனவு (இக்னே 6x) தூக்கம் வரும்போது திடுக்கிடல், கவலைக்குள்ளாக்கும் பயங்கரமான கனவுகள் (பேல் 6x) பகலில் நடந்தவைகளை இரவில் கனவு காணுதல் (பிரை 6x) மனதில் பல எண்ணங்களினுலும் கவலையினுலும் (காபியா 6x)

28. தொண்டை கம்மல்: அதிகம் உழைப்பினுல் வருவது (ஆர்னிகா 6x)

சாயந்திரம் ஈரத்தினால் உண்டாகுதல் (கார்பே வெஜி 6x) சாதாரண ஜலதோஷத்தால் ஏற்படுதல் (காஸ்டிகம் 6x), சாயந்திரம் கம்மல் (பாஸ் 6) அல்லது (பேல் 3x).

29. பலவீனம்: பேதியினாலும், இரத்தம் சிந்திப் போனதாலும் வருதல் (சைனா 3x) தசைகள் தளர்ந்து போகுதல் ஜெல்ஸீமியம் 6x) முகம் சிவந்து, ஊதி, மூளை களைத்துப் போகுதல் (பேர்ரம்பாஸ் 3x), இரேகமும், மூளையும் தளர்ச்சியடைந்து, ஞாபகசக்தி குறைந்து, வயிறு கட்டிபோகுதல் (நேட்ரம் மூர் 30), நரம்புத் தளர்ச்சி (பாஸ் ஆசிட் 3)

30. பல் கழிச்சல்: பற்கள் நாள் சென்று வளருதல் (கல்கே பாஸ் 6x) பேதி பச்சையாயும் தண்ணீராகவும் கண்டு, குழந்தைகளுக்கு எரிச்சலான குணம்

காணுதல் (சாமோ 6x) கொத்தின கீரையைப்போல பேதியாகி குழந்தைக்கு அதிக கோபமுண்டாகுதல் (மெக். கார்ப் 6) ஈர்கள் புண்ணுகுதல் (மெர்கூ. சாலு 6x).

31. **பல்வலி:** பல் ஈறுகள் வீங்கி சொத்தைப் பல் வலித்தல் (மெர்கூ. சாலு 6x) காங்கை பட்டால் வலி அதிகரித்தல் (சாமோ 6x) குளிர்ச்சியாலும், வெளியே வருவதாலும் வலி அதிகரித்தல் (பல்ஸ 6x) பொருத்துப் பொருத்து வலிகண்டு, வாயில் தண்ணீர் வைப்பதினுல் சுகமாகும் பல்வலி (காபியா 6x) [பிளாண்டாகோ 1x உள்ளுக்குக் கொடுத்து, நோயுள்ள பாகத்தில் அதே தாய்திராகவத்தைத தடவினுல் வலி சுகமாகும்.]

32. **படர் தேமல்:** அதி.நேர்த்தியான மருந்து (சல்பர் 30) அதில் சுகமில்லாமல் போனுல் (செபி 30).

**33. பித்தம்:** வயிறு கட்டி, ஈரல் ஸ்தானத்தில் நோயெடுத்து, தலைவலி கண்டு மனச் சோர்வு (பிரையோ 6x) கனமான ஆகாரம் சாப்பிட்டபின் காணுதல் (பல்ஸ 6x) காலையில் பச்சையாய் அல்லது மஞ்சளாகப் பேதியாகுதல் (போடோ 6x) தேக அப்பியாசமின்றி எப்பொழுதும் உட்கார்ந்திருப்பதினாலும் கனமான உணவுகளை அதிகம் சாப்பிடுவதினாலும் உண்டாகுதல் (நக்ஸ்வாமிகா 6x) மூத்திரம் மட்டாகி, மலங்கட்டி, அடிவயிற்றில் வாயு உண்டாகுதல் (லைகோ 30).

**34. பிரசவ நோய்:** பலவீனத்தால் கொஞ்சமாகவும், மெதுவாகவும் நோயெடுத்தல் (பல்ஸ 6x), அதிக பயம் கவலையோடு காய்ச்சல் கண்டு, இங்கு மங்கும் புரளுதல் (அகோனைட் 3x) கொஞ்சமாக நோய்கண்டு,

தசைகள் ஜிவ்வென்று இறுத்திப் பிடித்திருத்தல் (காலோபில்லம் 6x) முகம் கொதித்து, தலைவலிகண்டு, நோய் திடீரென்று நின்றுவிடல் (பேல் 3x) அடிக்கடி கடினமாக நொந்து பிரசவமாகாமலிருத்தல் (சிமிசி 6x), குழந்தை பிறந்தவுடன் நஞ்சு வெளியாக்க (ஆர்னிகா 3x), 5 அல்லது 10 நிமிஷத்திற்கு ஒரு தடவை ஒரு துளி கொடுக்கவும். ஒரு மணி நேரத்திற்குள் வராமல் போனால் (பல்ஸ அல்லது ஸீகேல் கார் 3) கொடுக்கவும். ஒவ்வொரு தடவையில் (ஆர்னிகா 1x) கொடுக்கவும். உதிரம் அதிகநேரம் வடிந்தால் (ஸீகேல் 30) அல்லது (சபீனு 3x) கொடுக்கலாம். உதிரம் நின்று விட்டால் (அகோனைட் 3x) உதிரம் நாற்ற மெடுத்தால் (கிரியோசட் 6) அல்லது கார்போ. வெஜி 6) கொடுக்கவும்.

35. புளியேப்பம்: நெஞ்செரிந்து, சப்தமாக ஏப்பம் விட்டு பாலை வெறுத்தல் (கல்கே. கார்ப் 6x) வாய் புளித்து காலையில் குமட்டல் (நக்ஸ்வாமிகா 6x) உடம்பெல்லாம் நடுக்கிறுற்போல் உணறுதல் (ஆசிட் சல்ப் 3)

36. பேதி: அஜீரணத்தால், நோயில்லாமல் தண்ணீராக போகும் பேதி (சீரு 6x) அதிகாலையில் மஞ்சளாகவும், தண்ணீராகவும் போகுதல் (போடோ 6x) வயிறு கடகடவேன்று தானுகப் போகுதல் (ஆலோ 30), தண்ணீராகப் போகும் பேதியில், கெட்டியான மலக்கட்டிகள் (ஆண்டி குருடம் 6x), வயிறு நொந்து தண்ணீராகப் போகுதல் (காலோஸி 3x) திடீரென்று அதிகமாகவும், வேகமாகவும் பேதியாகுதல் (குரோட்டன் 6x), பேதி

அதிகம் கண்டு, கைகால் மறத்து சில்லென்று வியர்த்தால் (வெராட் ஆல்பம் 6) பேதியாகும்போது ஆசனவாயில் எரிச்சல் (ஐரிஸ்வெர் 6) திடீரென்று அதிகாலையில் பேதியாகுதல் (சல்பர் 30) குழந்தைகளுக்கு புளிப்பாகவும், துர்கந்தத்தோடும் பேதியாகுதல் (ரீயம் 3).

37. மஞ்சட்காமாலை: களிமண் போல் இருக்கும் நாற்றமுள்ள மலம் (மெர்கூ. சாலு 6), ஈரல் பக்கத்தில் கொடிய நோய், வலது பக்கத்தில் படுத்தால் கொஞ்சம் சுகமாகுதல் (பிரை 6), வயிறு மஞ்சளாகப் போய் வலது தோளின் அடியில் வலித்தல் (செலிடோ 3), கோபம், பயம் இவைகளினால் உண்டானால் (சாமோ 6), வயிறு வெண்மையாகப் போகுதல், சாப்பிட்டால் அதிகரித்தல் (சீனு 3), சும்மா உட்கார்ந்திருப்

பதினுலும், மிகுதியான சாபபாடு சாப்பிடு வதினுலும் வரும் வியாதிக்கு (நக்ஸ்வாமிகா 6).

38. முதுகு நோய்: நடப்பதற்கு முந்தி முதுகு பிடித்தல், நடந்தால் சுகம் தோன்றுதல் (ரஸ்டாக்ஸ் 6), அதிகம் உழைப்பதனுல் வருவது (ஆர்னிகா 6), கருப்பை வியாதியால் வருதல் (சிமிசி 3), மூத்திர வியாதியால் வருவது (பேர்பேரீஸ் 1x).

39. மூலம்: அதிக பேதியாகி இரத்தம் ஊற்றல் (ஹமாமே 3), உட்கார்ந்திருப்பவர்களுக்கு வயிறு கட்டிப் போவது (நக்ஸ்வாமிகா 6), வயிறு நிரம்பி, ஆசன வாயில் குச்சிகள் நிறைந்தாற் போல் தோன்றுவது (எஸ்குலஸ்ஹிப் 3), சீதம் அதிகம் போவது (பல்ஸ 6). வயிறு கட்டி இரத்தம் ஊற்றி தலைக்கு அதிக காங்கையேறினுல் (ஸல்பர் 30).

40. மூளைக் களைப்பு: திரேகம் தளர்ச்சியடைந்து நடுக்கலெடுத்தல் (அர்ஜண்.நைட் 30), ஞாபக சக்தி குறைந்து, தலை மயக்கம் வருதல் (அனகார் 6), தசைகளில் பலம் குறைந்து, நடுக்கலெடுத்து, தூக்க மயக்கம், தலைச்சுற்றல் (ஜெல்ஸி 6), அதிக வியாதி, அதிகக் கவலையினால் மூளை களைப்பு (கல்கே பாஸ் 6).

41. மேக வெட்டை: ஆரம்பத்தில் சுரம் காணுவது (அகோனைட் 3x), மூத்திரத் தாரையைத் தொட்டாலும், அழுத்தினாலும் நோகுதல் (கன்னபிஸ் சடீவா 3) ஒன்றுக்குப் போனால் துளித் துளியாகப் போகுதல், ஆண்குறி உயர்ச்சி (காந்தாரிஸ் 3), அடிக்கடி ஒன்றுக்குப் போகுதல் (பெட்ரோலியம் 3), மஞ்சளாகவும், குழகுழவென்றும் வெட்டை வடிதல் (நேட்ரம்

ஸல்ப் 6), பால்போல் அல்லது மஞ்சளாக ஒழுகும் முற்றிப்போன வெட்டை (சேபியா 30).

42. மலக்கட்டு: எப்பொழுதும் உட்கார்ந்தேயிருப்பவர்களுக்கு வயிறு போகிறதில்லை, கொல்லைக்குப் போக வேண்டும் என்று நினைத்தாலும் போகிறதில்லை. அப்படி முக்கிப் போனாலும் மிகவும் கொஞ்சமாகப் போகுதல் (நக்ஸ்வாமிகா 6), வயிறு கல்லாகி, வழக்கமாக வயிறு போகாமலிருப்பவர்களுக்கு திரேகத்தின் மேல் சிரங்கு முதலியவைகள் உண்டாகுதல் (சல்பர் 30), குடல் திமிரடைந்து, மலம் வரண்டு, பெரிதாகவும், கெட்டியாகவும் போகுதல் (பிரையோ. 6), கோலியவ்வளவு சிறியதாகவும், கெட்டியாகவும் போகுதல் (ஓப்பியம் 6); அதிக மலம் பந்தமாகி, வரண்டு

கட்டி கட்டியாகப் போகுதல் (ப்ளம்பம் 6), வயிற்றில் அதிக மலம் சேருகிற வரையிலிருந்து பிறகு தான் வயிறு போகுதல் (அலுமிஞ 6), அடி வயிற்றில் வாயு மிகுதல் (லைக்கோ 30), ஆசனவாய் கனமாவதைப் போல் தோன்றி கொஞ்சமாக வயிறு போகுதல் (சேபியா 30),

43. **வயிற்று வலி:** குடல் நோய் செ. 22ஐ காண்க.

44. **வயிற்றில் வாயு:** வயிற்றிலிருந்து வாயு மேலுக்கு எழும்பி மூச்சுத் திணறுதல் (கார்போ. வெஜி 30), அடி வயிற்றில் வாயு, மலக்கட்டி (லைக்கோ 30) மேலுக்காவது, கீழுக்காவது செல்லக் கூடாத அகோர வலியெடுக்கும் வாயு (ரபானஸ் 30) கனதியான ஆகாரம் சாப்பிடுவதினால் உண்டாகும் வாயு (பல்ஸ 6),

அதிகம் தின்பதினால் உண்டாகும் வாயு (நக்ஸ்வாமிகா 6).

**45. வாயில் புண்:** இது சாதாரணமாக சிறுவர்களுக்கும், சில வேளை பெரியவர் களுக்கும் வரும் (போரக்ஸ் 3x), நாக்கும் பல்லீறுகளும் புண்ணாகி, வாய் நாறுதல் (மெர்கூ. சாலு 6), பல்லீறுகள் எல்லாம் புண்ணாகி, இரத்தம் வடிதல் (ஆசிட் சல்ப் 3).

**46. வாத ரோகம் கணு வாதம்:** முட்டிகள் கணுக்கள் நொந்து, காய்ச்சலடித்து, அமைதி யில்லாமல் கவலைப் படுதல் (அகோனைட் 3) முட்டிகள், கணுக்கள் வீங்கி, நொந்து, இர வில் அதிகரித்து, அதிகமாய் வியர்த்தும் கொஞ்சமாகிலும் சுகமில்லை (மெர்கூ. சாலு 6), நடந்தால், அசைந்தால், கணுக்கள், முட்டிகள் அதிகம் நோகுதல் (பிரையோ 6), நடந்தால் அசைந்தால் நோய் கொஞ்

சம் சுகமாகுதல் (ரஸ்டாக்ஸ் 6 ), குளிர்ச்சியாலும், ஈரத்தாலும் உண்டாகுதல் (டல்கமாரா 6) சூடான அறைக்குள் போனால் அதிகரித்தல், வெளியே வந்தால் கொஞ்சம் சுகமாகத் தெரிதல் (பல்ஸ 6), நோய் இங்குமங்கும் போகும் ஓடும் வாயு (காலிசல்ப் 6).

47. விக்கல்: அதிகம் வந்தால் (நக்ஸ்வாமிகா 6), இந்த மருந்தில் சுகமில்லாமல் போனால் (சைக்ளாமன் 6) சாப்பிட்டாவது, குடித்தாவது அல்லது சுருட்டு பிடித்த பின்னராவது வந்தால் (இக்னே 6), காட்டுக் காய்ச்சலில் அதி உக்கிரமமாக வருவது (நேட். மூர் 6 அல்லது 30), கொடிய தலை நோய் கண்டு, விடாமல் விக்கல் வருவது (ஸ்ட்ரமோனியம் 6).

**48. வாந்தி பேதி:** *வாந்தி பேதி நடமாடுங்காலத்தில் அதைத் தடுக்கக் காலை மாலையில் ஒன்றிரண்டு வேளை* (குப்ரம் 3x), *திடீரென்று வியாதி கண்டு, உடம்பு சில்லென்றாகி கைகால் தளர்ச்சியடைந்தால்* (ருபினி) *கர்ப்பூரத் திராவகத்தை* (Camphor Q) 5 *துளி ஒவ்வொரு பேதிக்கு ஒரு தடவை கொடுக்கவும். வாந்தியும், பேதியுமாக உடம்பு வலித்து நெற்றியில் சில்லென்று வியர்த்தால்* (வெராட்ஆல்ப் 3), *கைகால் மறத்து திமிரடைக்கது, வாந்தி பேதியாகுதல்* (குப்ரம்3), *கைகால் தளர்ந்து போய், தாகமெடுத்து இங்குமங்கும் புரளுதல்* (ஆர்சனிகம் 6), *திரேகம் முழுவதும் சில்லென்று குளிர்ந்து போய் கைகால் அசைவற்றுப் போகுதல்* (கார்போ. வெஜ் 30), *சுகமாகிற வரை* 15 *நிமிஷத்திற்கு ஒரு தடவை கொடுக்கவும்.*

49. நாக்குப்பூச்சி: முக்கியமானமருந்து (சீனு 200). ஒரு வாரத்திற்கு ஒரு தடவை.

50. நெருப்பினாலும், சுடு தண்ணீராலும் உண்டாகும் இரணங்கள்: கொப்புளங்கள் இல்லாமல் சரீரம் வெந்து இருந்தால் (யூரிடிகா யூரன்ஸ் Q) பூசவும். கொப்புளங்கள் உண்டானால் (காந்தாரிஸ் Q) மேலே பூசி (காந்தாரிஸ் 6) உள்ளுக்குக் கொடுக்கவும்.

51. நீரழிவு: இரவில் அடிக்கடி மூத்திரம் போகுதல் (ஆசிட் பாஸ் 6) வாதரோகமுள்ள பருத்தவர்களுக்கு (நேட்ரம் ஸல்ப் 6x) சாதாரணமாகக் கொடுக்கும் மருந்து (சைஜியம் ஜம்போலனம் 1x).

52. ஜலதோஷம்: ஆரம்பத்தில் அதிகக் காய்ச்சல் கண்டு, நாடி விரைவாய் ஓடி, அங்குமங்கும் புரளுவது. (அகோனைட் 3), காய்ச்சல் கண்டு, சளியில்லாமல் அதிக இருமல் உண்டாகுதல் (பேல் 6 அல்லது 30),

நாக்கு வெளுத்து, மலங்கட்டி, அதிக நெஞ்சு வலி (பிரையோ 30) சளி, இருமல், வாய் நாற்றம், அதிகம் வியர்த்தல் (மேர்கூ. சாலு 30). நெஞ்சில் கொர் கொர் என்று சளி பிடித்து இருமல் (ஆண்டி. டார்ட் 6), தொண்டை கம்மி, மஞ்சளான அதிக சளியுள்ள இருமல் (ஹீபார்ஸல்பர் 6 அல்லது 30), நெடு நாள் சென்று முற்றிப் போன வியாதிக்கு (ஸல்ப் 30) குளிர்ச்சியால் ஜலதோஷம் பிடித்தால் (அகோனைட் 3), மூக்கிலும், கண்களிலும் நீர் வடிந்து நாசிகள் புண்ணாகி எரிச்சலெடுத்தால் (ஆர்ஸ 6), தும்மல் அதிகமிருந்தால் (யூபரேஷியா 3), சளி முற்றிப் போனால் (மேர்கூ. சாலு 6), இரவில் மூக்கு சளியால் அடைத்துக் கொண்டால் (நக்ஸ்வர்மிகா 6), தொண்டை கம்மி ஜலதோஷம் பிடித்தால் (ஹீபார் 6).

---

# பத்தியம்

இவ்வௌஷதங்களைச் சாப்பிடும்பொழுது கடுமையான பத்தியம் ஒன்றும் கிடையாது. எனினும் இவ்வௌஷதத்தை முறிக்கும் எனக் கருதப்படும் சில பொருள்களை விலக்குதல் நலம். அதாவது, காப்பி, டீ, புகையிலை, சுருட்டு, அதிகக் காரம், புளிப்பு, கசப்பு, வெற்றிலை முதலியவைகளைத் தள்ளுதல் நலம்.

The Homoeopathy Press, Kumbakonam.

SIMILIA SIMILIBUS CURANTUR